“மக்களுக்காக இருப்பவர்கள் நாங்கள்.
மக்களோடு இருப்பவர் நாங்கள்.
மக்களுக்காகவே வாழ்பவர்கள் நாங்கள்.
எனவே, நாங்கள் எல்லாம் மக்களுடைய தொண்டர்கள்.”

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

தமிழ்நாடு அரசு
2023

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2023 - 2024

# செய்தி மற்றும் விளம்பரம்

மானியக் கோரிக்கை எண்.28

**மு.பெ. சாமிநாதன்**
செய்தித் துறை அமைச்சர்

# மானியக் கோரிக்கை எண்: 28
# செய்தி மற்றும் விளம்பரம்
## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 3 |
| 1 | நினைவகங்கள் | 6 |
| 2 | அரசு விழாக்கள் | 36 |
| 3 | செய்தி வெளியீட்டுப் பிரிவு | 57 |
| 4 | சமூக ஊடகப் பிரிவு | 59 |
| 5 | தமிழ்நாடு திரைப்படப் பிரிவு | 60 |
| 6 | புகைப்படப் பிரிவு | 65 |
| 7 | மேற்கோள் பிரிவு | 67 |
| 8 | கள விளம்பரம் | 69 |
| 9 | விளம்பரம் | 72 |
| 10 | ஊடக மையம் | 76 |
| 11 | பொருட்காட்சிப் பிரிவு | 77 |
| 12 | மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் | 87 |
| 13 | மாநிலச் செய்தி நிலையம், சென்னை | 90 |
| 14 | தமிழரசு | 95 |
| 15 | பத்திரிகையாளர் நலன் | 106 |
| 16 | பத்திரிகையாளர் நலவாரியம் | 112 |
| 17 | திரைப்படத் துறையினர் நலவாரியம் | 116 |
| 18 | திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள் | 121 |
| 19 | திரையரங்குகள், வீடியோ மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு | 130 |
| 20 | தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் (ம) தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் | 139 |
| | நிறைவுரை | 144 |

**"நாநல மென்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று"**

**(குறள்–641)**

சொல்வன்மைக்கு உள்ள சிறப்பு வேறு எதற்குமில்லை. எனவே, அது செல்வங்களில் எல்லாம் சிறந்த செல்வமாகும்.

**– திருக்குறளுக்கான முத்தமிழறிஞர் கலைஞர் உரை**

## முன்னுரை

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான், அனைத்துத் துறைகளின் சீரிய செயல்பாடுகளையும் சொல்வன்மையால் மக்கள் விரும்பிக் கேட்டு, அவற்றைப் படிக்கத் தூண்டும் சிறந்த செல்வமாகத் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை திகழத் தொடங்கியது.

தமிழ்நாடு அரசு, மக்களுக்காகச் செயல்படுத்தும் அனைத்து நலத்திட்டங்களையும் செய்திகளாகப் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையில், பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் மூலமாகக் கொண்டு சேர்க்கும் பணிகளைச் செய்துவரும் துறையே நமது செய்தி மக்கள் தொடர்புத்துறையாகும்.

மக்களாட்சி உருவாக்கப்பட்ட காலம் முதல், அரசின் ஆக்கப்பூர்வமான நல்லபல திட்டங்களை, அறிவிப்புகளை அடித்தள மக்களின் பார்வைக்குக் கொண்டுசேர்க்கும் ஈடு இணையற்ற துறையாகச் செய்தி மக்கள் தொடர்புத்துறை திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள், நலத்திட்டங்கள், அறிவிப்புகள், அரசாணைகள் முதலியவற்றைத் தமிழ்நாட்டின் கடைக்கோடி மக்களுக்கும் பத்திரிகை, ஊடகம் மற்றும் சமூக ஊடகப் பிரிவுகள் துணையோடு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் வாயிலாகக் கொண்டுசேர்ப்பதில் முனைந்து செயல்படுகிறது.

"ஓய்வை நான் ஒருபோதும் விரும்பியது இல்லை" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கூற்றுக்கேற்ப, உழைப்பு, உழைப்பு, உழைப்பு, என்பதையே தன் வாழ்வாகக் கொண்டு உங்களுக்காகத் தொடர்ந்து உழைப்பேன்; உழைத்துக் கொண்டே இருப்பேன்" என்று கூறி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நலன் காக்கும் பல்வேறு நலத்திட்டங்களை ஒவ்வொரு நாளும் அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள்.

இவ்வாறாக ஓய்வறியாமல் உழைத்துக் கொண்டிருக்கும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் மக்கள் நலத்திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்படும் விவரங்களையும், தமிழ்நாடு முழுவதும் கொண்டு சேர்த்திடும் சீரிய பணிகளையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஓய்வறியா உழைப்பால் மேற்கொள்ளப்பட்டுவரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றிப்பணிகள் அனைத்தையும் மக்களுக்கு உடனுக்குடன் விழிப்புணர்வூட்டுவதிலும் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை தமது பல்வேறு பிரிவுகளின் வாயிலாகத் திறம்பட செயலாற்றி வருகிறது.

# நினைவகங்கள்

தமிழ்நாட்டின் மிகச் சிறந்த ஆளுமைகள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு பெருமையினைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், விடுதலைக்கு வித்திட்ட தியாகிகள், சமூகநீதிக் கருத்துகளை ஊக்குவித்த தலைவர்கள், கவிஞர்கள், இசை மேதைகள், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாட்டின் தலைவர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்திடும் வண்ணம், செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், 81 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள், 2 நினைவுச் சின்னங்கள், ஒரு நினைவு வளைவு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அறிந்து பயனடையும் வகையில், சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

## தமிழகத்தில் அமைந்துள்ள நினைவகங்களின் விவரம்

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| **சென்னை மாவட்டம்** | | |
| 1 | பேரறிஞர் அண்ணா நினைவிடம் – அருங்காட்சியகம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 2 | புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 3 | காந்தி மண்டபம் | கிண்டி, சென்னை |
| 4 | பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் | கிண்டி, சென்னை |
| 5 | மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம் | கிண்டி, சென்னை |
| 6 | பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம் | கிண்டி, சென்னை |
| 7 | வ.உ.சி. செக்கு மண்டபம் | கிண்டி, சென்னை |
| 8 | மகாகவி பாரதியார் நினைவு இல்லம் | துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை |
| 9 | பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம் | திருமலைச் சாலை, தியாகராயர் நகர், சென்னை |
| 10 | வள்ளுவர் கோட்டம் | நுங்கம்பாக்கம், சென்னை |
| 11 | மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம் | கிண்டி, சென்னை |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 12 | தியாகிகள் மணிமண்டபம் | கிண்டி, சென்னை |
| 13 | இரட்டைமலை சீனிவாசன் நினைவகம் | கிண்டி, சென்னை |
| 14 | கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபம் | டாம்ஸ் சாலை, புதுப்பேட்டை, சென்னை |
| 15 | சிந்தனைச் சிற்பி ம.சிங்கார வேலர்– சுயமரியாதைச் சுடரொளி என்.ஜீவரத்தினம் மணி மண்டபங்கள் (ம) நூலகம் | இராயபுரம், சென்னை |
| 16 | நடிகர் திலகம் சிவாஜிகணேசன் மணிமண்டபம் | அடையாறு, சென்னை |
| 17 | புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா நினைவிடம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 18 | அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம் | இராஜா அண்ணாமலைபுரம், சென்னை |
| 19 | முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் | அண்ணா நினைவிட வளாகம், காமராஜர் சாலை, சென்னை |
| **கோயம்புத்தூர் மாவட்டம்** | | |
| 20 | உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிமண்டபம் | வையம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| **கடலூர் மாவட்டம்** | | |
| 21 | சுவாமி சகஜானந்தா மணிமண்டபம் | சிதம்பரம், கடலூர் மாவட்டம் |
| 22 | இராமசாமி படையாட்சியார் நினைவு மண்டபம் | மஞ்சக்குப்பம், கடலூர் மாவட்டம் |
| **தருமபுரி மாவட்டம்** | | |
| 23 | வள்ளல் அதியமான் கோட்டம் | தருமபுரி, தருமபுரி மாவட்டம் |
| 24 | தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம் | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 25 | பாரதமாதா நினைவாலயம் | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| **திண்டுக்கல் மாவட்டம்** | | |
| 26 | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம் | விருப்பாட்சி, திண்டுக்கல் மாவட்டம் |
| 27 | மாமன்னர்கள் ஹைதர்அலி, திப்பு சுல்தான் மணிமண்டபம் | அடியனூத்து கிராமம், திண்டுக்கல் மாவட்டம் |
| **ஈரோடு மாவட்டம்** | | |
| 28 | பெரியார்–அண்ணா நினைவகம் | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 29 | தீரன் சின்னமலை மணிமண்டபம் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| **காஞ்சிபுரம் மாவட்டம்** | | |
| 30 | பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் | சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| **கன்னியாகுமரி மாவட்டம்** | | |
| 31 | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 32 | காந்தி நினைவு மண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 33 | பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 34 | சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம் | இடலாக்குடி, கோட்டாறு நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 35 | மார்ஷல் நேசமணி மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| **கிருஷ்ணகிரி மாவட்டம்** | | |
| 36 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம் | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| **மதுரை மாவட்டம்** | | |
| 37 | தியாக சீலர் கக்கன் மணிமண்டபம் | தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 38 | தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம் | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 39 | பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம் | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 40 | மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம் | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 41 | பெருங்காமநல்லூர் தியாகிகள் நினைவு மண்டபம் | உசிலம்பட்டி, மதுரை மாவட்டம். |
| **மயிலாடுதுறை மாவட்டம்** | | |
| 42 | தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் | தில்லையாடி, மயிலாடுதுறை மாவட்டம் |
| 43 | தமிழிசை மூவர் மணிமண்டபம் | சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம் |
| **நாமக்கல் மாவட்டம்** | | |
| 44 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம் | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |
| 45 | அல்லாள இளைய நாயகர் குவிமாடம் | ஜேடார்பாளையம், நாமக்கல் மாவட்டம். |
| **சேலம் மாவட்டம்** | | |
| 46 | விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை நினைவுச் சின்னம் | சங்ககிரி, சேலம் மாவட்டம் |
| 47 | புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் மற்றும் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா நினைவு மண்டபம் | சேலம், சேலம் மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| **சிவகங்கை மாவட்டம்** | | |
| 48 | கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 49 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம் | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 50 | மருதுபாண்டியர் நினைவு மண்டபம் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 51 | வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| **தென்காசி மாவட்டம்** | | |
| 52 | தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம் | செங்கோட்டை, தென்காசி மாவட்டம் |
| 53 | பூலித்தேவன் நினைவு மாளிகை | நெற்கட்டும்செவல், தென்காசி மாவட்டம் |
| **தஞ்சாவூர் மாவட்டம்** | | |
| 54 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம் | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 55 | பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவு மண்டபம் | ஆவுடையான்குளம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| **திருச்சி மாவட்டம்** | | |
| 56 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் நினைவு இல்லம் | வரகனேரி, திருச்சி மாநகர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| **திருநெல்வேலி மாவட்டம்** | | |
| 57 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம் | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 58 | தமிழறிஞர் கால்டுவெல் நினைவு இல்லம் | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |
| 59 | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் மணிமண்டபம் | பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| **திருப்பூர் மாவட்டம்** | | |
| 60 | திருப்பூர் குமரன் நினைவகம் | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 61 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம் | உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் |
| **திருவாரூர் மாவட்டம்** | | |
| 62 | தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவு இல்லம் | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 63 | தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபம் | திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் |
| 64 | மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம் | திருவாரூர், திருவாரூர் மாவட்டம் |
| **தூத்துக்குடி மாவட்டம்** | | |
| 65 | மகாகவி பாரதியார் மணிமண்டபம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 66 | மகாகவி பாரதியார் இல்லம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 67 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் இல்லம் | ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 68 | வீரன் அழகு முத்துக்கோன் மணிமண்டபம் | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |
| 69 | சுதந்திரப் போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம் | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 70 | சுதந்திரப் போராட்டவீரன் வெள்ளையத்தேவன் நினைவகம் | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம் |
| 71 | அமுதகவி உமறுப்புலவர் நினைவகம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 72 | வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம் | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |
| 73 | கி.ராஜநாராயணன் அரங்கம் | கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம். |
| 74 | டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபம் | திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் |
| **வேலூர் மாவட்டம்** | | |
| 75 | முத்து மண்டபம் (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரமராஜ சிங்கன் நினைவகம்) | வேலூர், வேலூர் மாவட்டம் |
| **விழுப்புரம் மாவட்டம்** | | |
| 76 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மணிமண்டபம் | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| **விருதுநகர் மாவட்டம்** | | |
| 77 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 78 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 79 | தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| **கேரள மாநிலம்** | | |
| 80 | தந்தை பெரியார் நினைவகம் | வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம் |
| **உத்திரபிரதேசம் மாநிலம்** | | |
| 81 | பாரதியார் நினைவு இல்லம் | வாரணாசி, உத்திரபிரதேசம் மாநிலம். |

## அரங்கங்கள்

| வ. எண் | அரங்கம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | மூதறிஞர் இராஜாஜி மண்டபம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 2 | கலைவாணர் அரங்கம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 3 | அண்ணா கலையரங்கம் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 4 | மகாமகம் பல்நோக்கு கலை அரங்கம் | கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் |

## நினைவுத் தூண்கள்

| வ. எண் | நினைவுத் தூண் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | "வெள்ளையனே வெளியேறு" இயக்கப் பொன்விழா நினைவுத் தூண் | காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 2 | குடியரசு பொன்விழா நினைவுத் தூண் | காந்தி சிலை அருகில், காமராஜர் சாலை, சென்னை |
| 3 | சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 4 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா நினைவுத் தூண் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 5 | இசை மேதை நல்லப்பசுவாமி நினைவுத் தூண் | விளாத்திகுளம், தூத்துக்குடி மாவட்டம். |

## நினைவுச் சின்னம்

| வ. எண் | நினைவுச் சின்னம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | வீரத்தாய் குயிலி நினைவுச் சின்னம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 2 | சுதந்திரப் பொன்விழா நினைவுச் சின்னம் | போர் நினைவுச் சின்னம் அருகில், காமராஜர் சாலை, சென்னை |

## நினைவு வளைவு

| வ. எண் | நினைவு வளைவு | அமைவிடம் |
|---|---|---|
| 1 | எம்.ஜி.ஆர் நூற்றாண்டு நினைவு வளைவு | மெரினா கடற்கரை, இராஜாஜி சாலை, சென்னை |

**மொழிப்போர் தியாகிகளை கௌரவித்தல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மொழிப்போர் தியாகிகள் தினமான 25.01.2023 அன்று, தமிழ்மொழி காக்க இன்னுயிர் நீத்த தியாகிகளை நினைவு கூறும் வகையில் கடந்த ஆண்டைப் போல இந்த ஆண்டும் சென்னை காந்தி மண்டப வளாகத்தில் உள்ள மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபத்தில் அவர்களது திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

**உத்தமர் காந்தியடிகளுக்கு திருவுருவச்சிலை**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.08.2022 அன்று எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலையினை திறந்து வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள "விடுதலைப் போரில் தமிழகம்" புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைத்து சிறப்பித்தார்கள்.

**நிறைவுபெற்ற பணிகள்**

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு பன்னோக்கு மருத்துவமனை வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு திருவுருவச் சிலை ரூபாய் ஒரு கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு 28.05.2022 அன்று மேனாள் துணைக் குடியரசுத் தலைவர் திரு.எம்.வெங்கையா நாயுடு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள அம்பேத்கர் மணிமண்டப வளாகத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலை 27.10.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மறைந்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களின் நினைவினைப் போற்றும் வகையிலும், அவருடைய படைப்பாளுமையை வெளிப்படுத்தும் வகையிலும், அவருடைய புகைப்படங்கள், படைப்புகள் ஆகியவற்றை மாணவர்களும், பொதுமக்களும் அறிந்து கொள்ளும் வகையில், கரிசல் இலக்கியத்தை உலகறியச் செய்த பிதாமகர் கி.ரா. அவர்களுக்கு, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் அரசின் சார்பில் திருவுருவச்சிலை, நூலகத்துடன் கூடிய நினைவரங்கம் ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு

02.12.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு அவரது பிறந்த நாளான 11.12.2022 அன்று உத்தரப்பிரதேச மாநிலம், வாரணாசியில் பாரதியார் வாழ்ந்த வீடு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் 18 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்யப்பட்டு அவ்வில்லத்தில் அன்னாரது மார்பளவு சிலை அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னையிலிருந்து காணொலி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவில், செய்தித் துறை அமைச்சர் என்கின்ற முறையில் நானும், அரசுச் செயலாளர் அவர்களும், அரசு அலுவலர்களும் வாரணாசியில் நேரில் கலந்து கொண்டோம்.

நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் அல்லாள இளைய நாயகர் அவர்களுக்கு, ரூபாய் 26 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பீட்டில், குவிமாடத்துடன் (Dome) திருவுருவச் சிலை நிறுவப்பட்டு பொதுமக்களின் பார்வைக்கு 28.01.2023 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர்

பெருமக்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆங்கிலேயர்களின் எதேச்சதிகார சட்டத்தை எதிர்த்து போராடியதால் 1920ஆம் ஆண்டு மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், பெருங்காமநல்லூரில் ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட பிரமலைக்கள்ளர் சமூகத்தைச் சார்ந்த 16 தியாகிகளைக் கௌரவிக்கும் வகையிலும், அந்நிகழ்வு நடந்து நூறாண்டுகள் ஆனதைக் குறிக்கும் வகையிலும், ரூபாய் ஒரு கோடியே 47 இலட்சத்தில் பெருங்காமநல்லூர் தியாகிகள் நினைவு மண்டபம் கட்டப்பட்டு 14.02.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**2021–22 மற்றும் 2022–23ஆம் ஆண்டு 110 விதியின் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் – தொடர் நடவடிக்கை விவரங்கள்**

- தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளைப் போற்றும் விதமாக, அவரது வாழ்வின் சாதனைகளை, சிந்தனைகளை மக்களும், வருங்காலத் தலைமுறையும் அறியுக்கூடிய வகையில், நவீன விளக்கப் படங்களுடன், சென்னை, காமராஜர் சாலை,

அண்ணா நினைவிட வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 39.00 கோடி மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நினைவிடம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

- அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுடைய 175ஆவது ஆண்டு விழாவின் நினைவாகவும், அவரது சமூகப் பணியைப் போற்றும் விதமாகவும் சென்னை காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைத்திட ரூபாய் 2 கோடியே 48 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் தற்போது நிறைவு பெறும் தருவாயில் உள்ளது.
- 1987ஆம் ஆண்டு இடஒதுக்கீட்டுப் போராட்டத்தில் காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 21 சமூகநீதிப் போராளிகளுக்கு ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில், விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைத்திட விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட வழுதரெட்டி கிராமத்தில் இடம் தேர்வுசெய்யப்பட்டு, நிருவாக அனுமதியளித்து, அரசாணை வெளியிடப்பட்டு விரைவில் பணி தொடங்கப்படவுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் – தொடர் நடவடிக்கைகளின் விவரங்கள்**

தூத்துக்குடியில் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு திருவுருவச்சிலை ரூபாய் 77 இலட்சத்து 87 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

செய்தித் துறையின் பராமரிப்பிலுள்ள ஒட்டப்பிடாரம் வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்ந்த நினைவு இல்லத்தைப் புனரமைக்கவும், திருநெல்வேலியில் உள்ள வ.உ.சிதம்பரனார் மணிமண்டபத்தில் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்து பயனடையும் வகையில், ஒலி–ஒளிக் காட்சி அமைத்திடவும் ரூபாய் 72 இலட்சத்து 49 ஆயிரம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

**செய்தித் துறையின் அறிவிப்புகள் – தொடர் நடவடிக்கைகளின் விவரங்கள்**

இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகி, ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்ற தென்னிந்தியாவின் முதல் பெண்மணி, அண்ணல் காந்தியடிகளால் தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்று அழைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்கு, கடலூரில் திருவுருவச்சிலை அமைத்திட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியாகவும், இளைஞர்கள், மாணவர்களின் எழுச்சி நாயகனாகவும் திகழ்ந்த, மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களுக்கு, சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் திருவுருவச் சிலை அமைத்திட கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும், இந்தியத் திருநாட்டின் தேசிய கீதத்தை இயற்றியவருமான வங்கக் கவி இரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கு சென்னை, இராணி மேரி கல்லூரியில் திருவுருவச் சிலை அமைத்திட, கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெண் சமூகச் சீர்திருத்தவாதி, எழுத்தாளர், தேவதாசி ஒழிப்பு இயக்கம், திராவிட இயக்கத்தின் அரசியல் முன்னோடி மூவலூர் இராமாமிர்தம் **அம்மையார்** அவர்களுக்கு மயிலாடுதுறையில் திருவுருவச் சிலை அமைத்திட, கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

நாட்டிலேயே சட்டமன்றத்திற்கு முதல் பெண் உறுப்பினராகத் தேர்வுசெய்யப்பட்டவரும், இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவரும், தமிழ்நாட்டின் சமூகச் சீர்திருத்தப் பெண் மருத்துவருமான

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கு, புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் திருவுருவச் சிலை அமைத்திட, கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தியத் திருநாட்டின் 75ஆவது சுதந்திர நாள் அமுதப் பெருவிழாவை முன்னிட்டு விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களை மேம்படுத்தி ஒலி–ஒளிக்காட்சி அமைக்கவும், சுதந்திரப் போராட்டத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் குறும்படங்கள் தயாரிக்கவும், மக்களுக்குத் தொண்டாற்றிய தியாகிகளை நினைவுகூரும் வகையில் நினைவு மண்டபங்களைப் புதுப்பிக்கவும் பொதுமக்கள் அறிந்துகொள்ள உதவும் வகையில் புகைப்படக்காட்சி, ஒலி–ஒளிக்காட்சி போன்றவை அமைத்திட முதற்கட்டமாக, 6 நினைவிடங்களில் ஒலி–ஒளிக்காட்சி அமைத்திட, திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் தியாக சீலர்களை நினைவுகூரும் வகையில் அமைக்கப்பட்டுள்ள காந்தி அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராஜர் உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட நினைவகம், பெரியவர் பக்தவத்சலம் நினைவக மண்டபம், மூதறிஞர் இராஜாஜி

நினைவக மண்டபம் ஆகியவற்றை மேம்படுத்திட ரூபாய் 3 கோடியே 36 இலட்சத்து 82 ஆயிரம் மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது.

சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் திருவுருவச் சிலையும், திருமூர்த்தி அணை அருகில் அரங்கமும் அமைத்திட ரூபாய் 2 கோடியே 53 இலட்சத்து 26 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டப் பணிகள் நடைபெற்ற போது ஏற்பட்ட விபத்தில் இறந்தவர்களுக்காக ஆழியாறு அணை பூங்காவில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் நினைவு மண்டபம் மாற்றி அமைக்கப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியில் உள்ள நீர்வளத்துறையின் தலைமை பொறியாளர் அலுவலக வளாகத்திற்கு ஒன்றிய அரசின் மறைந்த மேனாள் அமைச்சர் "சி.சுப்பிரமணியம் வளாகம்" என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இவ்வளாகத்தில் விவசாய பெருமக்களுக்கு பயிற்சிகள், கருத்தரங்கங்கள் போன்ற நிகழ்ச்சிகள்

நடத்த ஏதுவாக தரைத்தளம், மேல்தளம் கொண்ட அரங்கம் கட்டப்பட்டு, தரைத்தள அரங்கத்திற்கு "வி.கே.பழனிச்சாமி அரங்கம்" என பெயரும், மேல்தள அரங்கத்திற்கு "பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அரங்கம்" என பெயரும் சூட்டப்படும்.

இவ்வளாகத்தில் வி.கே.பழனிச்சாமி கவுண்டர் மேனாள் ஒன்றிய அமைச்சர் சி.சுப்பிரமணியம், தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் ஆகியோரின் திருவுருவச்சிலைகளும் நிறுவப்படும். மேற்குறிப்பிட்ட அரங்கம் அமைக்கவும், திருவுருவச்சிலைகள் நிறுவிட ரூபாய் 4 கோடியே 28 இலட்சத்து 71 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளது.

தமிழுக்கும், தமிழக மக்களுக்கும் அயராது உழைத்தவரும், சமூகநீதிக் கோட்பாடுகளுக்காகச் சட்டவடிவம் கொடுத்தவருமான சென்னை மாகாணத்தின் மேனாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் சேவைகளை நினைவுகூரும் வகையில், அன்னாருக்கு சென்னை காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச் சிலை அமைத்திட ரூபாய் 17 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாமக்கல் நகரில் அன்னாரின் பெயரில் ஓர் அரங்கமும் அமைத்திட ரூபாய் 2 கோடியே 50 இலட்சம்

மதிப்பீட்டில் நிருவாக அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

கொங்கு மண்டலத்தில் ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஏக்கர் பாசனம் பெறும் நீர்ப்பாசனத் திட்டமான கீழ்பவானி பாசனத் திட்டம் கொண்டுவர முக்கியக் காரணகர்த்தாவாக இருந்த, ஈரோடு தொகுதியில் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினரும், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று சுமார் பதினொரு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த, உத்தமத் தியாகி ஐயா திரு.ஈஸ்வரன் அவர்களது நினைவைப் போற்றும் வகையிலும், இன்றைய தலைமுறையினரும் அவருடைய செயல்பாடுகளைத் தெரிந்துகொள்ளும் வகையிலும், ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம் அமைத்திட ரூபாய் 2 கோடியே 60 இலட்சம் நிதியொப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் விரைவில் பணிகள் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

மேனாள் அமைச்சரும், ஏழை எளியோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பெரும் பங்காற்றி மறைந்த தனிப்பெரும் தலைவரும், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர்களின்

அமைச்சரவையில் சிறப்புடன் பணியாற்றிய திரு.ஏ.கோவிந்தசாமி அவர்களின் நினைவாக விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் திருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம் ரூபாய் 2 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட நிருவாக அனுமதியளித்துள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

தூத்துக்குடி மாவட்டம், காமநாயக்கன்பட்டியில் அமைந்துள்ள புனித பரலோகமாதா ஆலய வளாகத்தில் வீரமாமுனிவர் அவர்களுக்கு, திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைத்திட ரூபாய் ஒரு கோடி நிதியொப்பளிப்பு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்ட மாவீரர்கள் மற்றும் தலைவர்களுக்கு சிலை**

சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் தமிழ்நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆட்சியினை எதிர்த்து தீரமாய்ப் போரிட்டுத் தூக்குக் கயிற்றினை ஏற்றுக்கொண்ட விடுதலைப் போராட்ட மாவீரர் பாஞ்சாலங்குறிச்சி குறுநில மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலையும், தாய்நாட்டின் விடுதலைக்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து விடுதலை வேள்வியில் தீர்க்கமாய்ப் போரிட்ட சிவகங்கைச்

சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்கு திருவுருவச் சிலையும், வ.உ.சிதம்பரனார் அவர்கள் சிறையில் இருந்தபொழுது இழுத்த செக்கு வைக்கப்பட்டுள்ள மண்டபம் பொலிவூட்டப்பட்டு, அங்கு அமைக்கப் பட்டுள்ள அன்னாரது மார்பளவுச் சிலையையும், 14.02.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**தற்போது நடைபெற்று வரும் பணிகள் மற்றும் தொடங்கப்படவுள்ள பணிகள்**

கோயம்புத்தூர் வ.உ.சிதம்பரனார் பூங்காவில், வ.உ.சிதம்பரனார் அவர்களுக்குத் திருவுருவச் சிலை அமைத்திட ரூபாய் 40 இலட்சத்து 42 ஆயிரம் நிதியொப்பளிப்பு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் நிறைவுரும் தருவாயில் உள்ளது.

புதுக்கோட்டை மன்னர் ராஜகோபாலத் தொண்டைமான் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் அருங்காட்சியத்துடன் கூடிய நினைவுமண்டபம் அமைக்க ரூபாய் 3 கோடியே 3 இலட்சம் மதிப்பீட்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு மயிலாடுதுறையில் அரங்கம்

மற்றும் சிலை அமைத்திட ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளது.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மணிமண்டபங்களில் அமர்ந்து போட்டித் தேர்வுக்குத் தயாராகும் மாணாக்கர்களின் வசதிக்காக முதற்கட்டமாக 10 மணிமண்டபங்களில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட அரசாணை வெளியிட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செய்தி மக்கள் தொடர்புத் துறையில் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர்த் தியாகிகள், தமிழ் அறிஞர்கள், முக்கியத் தலைவர்களின் மணிமண்டபங்கள், நினைவகங்கள், அரங்கங்கள் ஆகியவற்றில், அவர்களின் வாழ்க்கை வரலாறு, ஒளிப்படத் தொகுப்புகள் (Photo Album), அத்தலைவர்கள் எழுதிய புத்தகங்கள், அத்தலைவர்களைப் பற்றி வெளிவந்துள்ள புத்தகங்கள் அனைத்தும் காட்சிப்படுத்தப்பட உள்ளது.

அவர்களைப் பற்றிய குறும்படங்கள் ஒளிபரப்பிட ஏதுவாக, முதற்கட்டமாக 15 இடங்களில் அகண்ட

திரைத் தொலைக்காட்சி (LED TV) நிறுவப்படும், மேலும், 360 டிகிரியில் புகைப்படம் எடுத்து சமூக ஊடகங்கள் மற்றும் வலைத்தளங்களில் பொதுமக்கள் கண்டு பயனடைந்திடும் வகையில், விரைவுத் துலங்கல் குறியீடு (QR Code) முறையில் இவைகள் பதிவேற்றம் செய்யப்படும். இப்பணிகள் ரூபாய் 2 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டம் கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் அவர்களின் மார்பளவு சிலைக்குப் பதிலாக ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் குதிரை மீது அமர்ந்தவாறுள்ள திருவுருவச்சிலை அமைத்திட பணிகள் நடைபெற்று வருகிறது.

சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள பேராசிரியர் அன்பழகனார் கல்வி வளாகத்தில் மேனாள் அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகனார் அவர்களின் திருவுருவச் சிலை நிறுவப்பட்டு விரைவில் திறக்கப்பட உள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்கள், தலைவர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ் மொழிக் காவலர்கள் ஆகியோர்களின் புகைப்படங்கள், வாழ்கைக்குறிப்புகள் அடங்கிய தகவல் பலகை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி அலுவலகங்கள் கீழ்காணும் இடங்களின் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | மண்டலம் | மாவட்டம் | இடங்கள் விவரம் |
|---|---|---|---|
| 1 | சென்னை | சென்னை | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | செங்கல்பட்டு | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | காஞ்சிபுரம் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | திருவள்ளூர் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | வேலூர் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | திருப்பத்தூர் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | இராணிப்பேட்டை | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | திருவண்ணாமலை | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| 2 | திருச்சி | திருச்சி | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | விழுப்புரம் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | பெரம்பலூர் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |

| வ. எண் | மண்டலம் | மாவட்டம் | இடங்கள் விவரம் |
|---|---|---|---|
| | | அரியலூர் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | கடலூர் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | கரூர் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | கள்ளக்குறிச்சி | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| 3 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | நீலகிரி | 1) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்<br>2) உதகை அரசு தாவரவியல் பூங்கா |
| | | சேலம் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | நாமக்கல் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | ஈரோடு | 1) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்<br>2) பெரியார் அண்ணா நினைவகம் |

| வ. எண் | மண்டலம் | மாவட்டம் | இடங்கள் விவரம் |
|---|---|---|---|
| | | தருமபுரி | 1) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்<br>2) அதியமான் கோட்டம்<br>3) தியாகி சுப்பிரமணிய சிவா மணி மண்டபம் |
| | | திருப்பூர் | திருப்பூர் குமரன் நினைவு மண்டபம் |
| | | கிருஷ்ணகிரி | 1) மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம்<br>2) மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பிறந்த இல்லம், ஓசூர் |
| 4 | திருநெல்வேலி | திருநெல்வேலி | அரசு அருங்காட்சியகம் |
| | | கன்னியாகுமரி | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | விருதுநகர் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | தூத்துக்குடி | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | தென்காசி | வாஞ்சிநாதன் மணிமண்டபம் |
| 5 | மதுரை | மதுரை | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |

| வ. எண் | மண்டலம் | மாவட்டம் | இடங்கள் விவரம் |
|---|---|---|---|
| | | தேனி | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | திண்டுக்கல் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | இராமநாதபுரம் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | சிவகங்கை | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| 6. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | நாகப்பட்டிணம் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | திருவாரூர் | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | மயிலாடுதுறை | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |
| | | புதுக்கோட்டை | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம் |

# அரசு விழாக்கள்

நம் தாய் திருநாடாம் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக தங்கள் இன்னுயிரைத் துச்சமென நினைத்து தியாகம் செய்த தன்னிகரில்லாத் தலைவர்களையும், தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டத் தலைவர்களையும், செம்மொழி, அமுதமொழி என சிறப்புப் பெற்ற நம் தாய்மொழி, தமிழ்மொழி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்திட்ட அறிஞர் பெருமக்கள் மற்றும் மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்த மாபெரும் தலைவர்களைப் போற்றி புகழ்ந்திடவும், அப்பழுக்கற்ற அவர்களது உயரிய சிந்தனைகளை மற்றும் தியாகங்களை, தொண்டுகளை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில் அப்பெருமக்களின் பிறந்த நாள் விழாக்கள் மற்றும் நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசின் சார்பிலான இவ்விழாக்களில் மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் தொடர்புடையத் தலைவர்களின் வழித்தோன்றல்கள்

ஆகியோர் பங்கேற்று அன்னாரது திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மலர் மாலைகள் அணிவித்தும், திருவுருவப் படங்களுக்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தப்படுகிறது.

சென்னை மாவட்டத்தில் 37 தலைவர்களுக்கும், ஏனைய மாவட்டங்களில் 77 தலைவர்களுக்கும் பல்வேறு இடங்களில் அன்னாரின் திருவுருவச் சிலைகளுக்கு மலர் மாலை அணிவித்தும், மலர் தூவியும் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

**சென்னையில் நடத்தப்படும் விழாக்கள்**

| வ. எண் | நாள் | விழா |
|---|---|---|
| 1 | ஜனவரி 17 | புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் |
| 2 | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள் |
| 3 | ஜனவரி 30 | அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள் |
| 4 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள் |
| 5 | பிப்ரவரி 24 | செல்வி ஜெ ஜெயலலிதா பிறந்த நாள் |
| 6 | ஏப்ரல் 14 | டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பிறந்த நாள்–சமத்துவ நாள் |
| 7 | சித்திரை முழு நிலவு நாள் | சித்திரை முழு நிலவு நாளில் கண்ணகிக்கு விழா |

| வ. எண் | நாள் | விழா |
|---|---|---|
| 8 | ஏப்ரல் 17 | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த நாள் |
| 9 | ஏப்ரல் 27 | சர்.பி.டி.தியாகராயர் பிறந்த நாள் |
| 10 | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் |
| 11 | ஜூன் 3 | முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் |
| 12 | ஜூன் 5 | கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் பிறந்த நாள் |
| 13 | ஜூன் 24 | கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் |
| 14 | ஜூன் 26 | சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் பிறந்த நாள் |
| 15 | ஜூலை 7 | இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாள் |
| 16 | ஜூலை 11 | வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள் |
| 17 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் |
| 18 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் |
| 19 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி சங்கரலிங்கனார் |
| 20 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி செண்பகராமன் |
| 21 | ஆடி மாதம் 18ஆம் நாள் | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன்சின்னமலை நினைவு நாள் |

| வ. எண் | நாள் | விழா |
|---|---|---|
| 22 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் |
| 23 | செப்டம்பர் 11 | மகாகவி பாரதியார் நினைவு நாள்– மகாகவி நாள் |
| 24 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் |
| 25 | செப்டம்பர் 16 | இராமசாமி படையாட்சியார் பிறந்த நாள் |
| 26 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள்– சமூகநீதி நாள் |
| 27 | செப்டம்பர் 27 | டாக்டர் சி.பா. ஆதித்தனார் பிறந்த நாள் |
| 28 | செப்டம்பர் 29 | மேனாள் சென்னை மேயர் சிவராஜ் பிறந்த நாள் |
| 29 | அக்டோபர் 1 | நடிகர் திலகம் சிவாஜிகணேசன் பிறந்த நாள் |
| 30 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் |
| 31 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பிறந்த நாள் |
| 32 | நவம்பர் 8 | தமிழறிஞர் வீரமாமுனிவர் பிறந்த நாள் |
| 33 | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் |
| 34 | நவம்பர் 18 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் நினைவு நாள்– தியாகத் திருநாள் |

| வ. எண் | நாள் | விழா |
|---|---|---|
| 35 | நவம்பர் 23 | கவிஞர் சுரதா பிறந்த நாள் |
| 36 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் |
| 37 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் |

## மாவட்டங்களில் நடத்தப்படும் விழாக்கள்

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 1 | ஜனவரி 3 | வீரமங்கை வேலுநாச்சியார் பிறந்த நாள் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 2 | ஜனவரி 15 | ஜான் பென்னிகுயிக் பிறந்த நாள் | லோயர் கேம்ப், தேனி மாவட்டம் |
| 3 | ஜனவரி 17 | புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் | காமராஜர் சாலை, சென்னை மாவட்டம் |
| 4 | ஜனவரி 17 | புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் | சேலம், சேலம் மாவட்டம் |
| 5 | தை 5ஆம் தேதி | காளிங்கராயன் அவர்கள் வாய்க்கால் அமைத்து பாசனத்திற்கு அர்ப்பணித்த நாள் | காளிங்கராயன் அணைக்கட்டு, ஈரோடு மாவட்டம் |
| 6 | ஜனவரி 26 | தியாகி சங்கரலிங்கனார் பிறந்த நாள் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 7 | ஜனவரி 27 | சுவாமி சகஜானந்தா பிறந்த நாள் | சிதம்பரம், கடலூர் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 8 | பிப்ரவரி 1 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் பிறந்த நாள் | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |
| 9 | பிப்ரவரி 6 | உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு பிறந்த நாள் | வையம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். |
| 10 | பிப்ரவரி 7 | மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் பிறந்த நாள் | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 11 | தைப்பூசத் திருநாள் | திருமலை நாயக்கர் பிறந்த நாள் | மதுரை, மதுரை மாவட்டம் |
| 12 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் பிறந்த நாள் | இராயபுரம், சென்னை மாவட்டம் |
| 13 | பிப்ரவரி 19 | தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. பிறந்த நாள் | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 14 | பிப்ரவரி 22 | தில்லையாடி வள்ளியம்மை பிறந்த நாள் | தில்லையாடி, மயிலாடுதுறை மாவட்டம் |
| 15 | பிப்ரவரி 24 | செல்வி ஜெ ஜெயலலிதா பிறந்த நாள் | சேலம், சேலம் மாவட்டம் |
| 16 | மார்ச் 30 | ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்த நாள் | இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் |
| 17 | ஏப்ரல் 2 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் பிறந்த நாள் | வரகனேரி, திருச்சி மாநகர், திருச்சி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 18 | ஏப்ரல் 10 | தியாகி பி. சீனிவாசராவ் பிறந்த நாள் | திருத்துறைப் பூண்டி, திருவாரூர் மாவட்டம் |
| 19 | ஏப்ரல் 13 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த நாள் | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 20 | ஏப்ரல் 16 | வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 21 | சித்ரா பௌர்ணமி | வள்ளல் அதியமான் பிறந்த நாள் | அதியமான் கோட்டை, தருமபுரி மாவட்டம் |
| 22 | ஏப்ரல் 17 | தீரன் சின்னமலை பிறந்த நாள் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 23 | மே 7 | இராபர்ட் கால்டுவெல் பிறந்த நாள் | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |
| 24 | சித்திரை இறுதி வெள்ளி | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |
| 25 | சித்திரை இறுதி வெள்ளி | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் | பாஞ்சாலங்குறிச்சி, தூத்துக்குடி மாவட்டம் |
| 26 | மே 23 | பெரும்பிடுகு முத்தரையர் பிறந்த நாள் | திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 27 | மே 31 | சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் பிறந்த நாள் | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம். |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 28 | ஜூன் 12 | மார்ஷல் நேசமணி பிறந்த நாள் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 29 | ஜூன் 16 | தியாகி விஸ்வநாததாஸ் பிறந்த நாள் | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 30 | ஜூன் 18 | தியாக சீலர் கக்கன் பிறந்த நாள் | மேலூர் அருகில், தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 31 | ஜூன் 23 | பட்டுக்கோட்டை அழகிரிசாமி பிறந்த நாள் | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 32 | ஜூன் 24 | கவிஞர் கண்ணதாசன் பிறந்த நாள் | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 33 | ஜூலை 6 | தமிழறிஞர் பரிதிமாற்கலைஞர் பிறந்த நாள் | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |
| 34 | ஜூலை 11 | வீரன் அழகு முத்துக்கோன் பிறந்த நாள் | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |
| 35 | ஜூலை 11 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் பிறந்த நாள் | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 36 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 37 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 38 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் | திருமலைச்சாலை தியாகராயர் நகர், சென்னை |
| 39 | ஜூலை 17 | தியாகி வாஞ்சிநாதன், தியாகிகள் தினம் | செங்கோட்டை, தென்காசி மாவட்டம் |
| 40 | ஜூலை 31 | சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்த நாள் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 41 | ஆடி 17, 18 | வல்வில் ஓரி விழா | கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம் |
| 42 | ஆடி 18 | தீரன் சின்னமலை நினைவு நாள் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 43 | ஆடி 18 | தீரன்சின்னமலை நினைவு நாள் | தூக்கிலிடப்பட்ட இடமான சங்ககிரி, சேலம் மாவட்டம் |
| 44 | ஆகஸ்ட் 20 | விடுதலைப் போராட்டவீரர் ஒண்டி வீரன் நினைவு நாள் | பாளையங் கோட்டை, திருநெல்வேலி மாவட்டம். |
| 45 | ஆகஸ்ட் 21 | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் பிறந்த நாள் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 46 | ஆகஸ்ட்25 | திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் பிறந்த நாள் | காங்கேய நல்லூர், காட்பாடி வட்டம், வேலூர் மாவட்டம், |
| 47 | ஆவணி 16 | விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் பிறந்த நாள் | நெற்கட்டும் செவல், தென்காசி மாவட்டம் |
| 48 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் | ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 49 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 50 | செப்டம்பர் 5 | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் நினைவு நாள் | விருப்பாச்சி, திண்டுக்கல் மாவட்டம் |
| 51 | செப்டம்பர்15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் | அண்ணா சதுக்கம், சென்னை |
| 52 | செப்டம்பர்15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் | சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 53 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 54 | செப்டம்பர் 16 | இராமசாமி படையாட்சியார் பிறந்த நாள் | மஞ்சக்குப்பம், கடலூர் மாவட்டம் |
| 55 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 56 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் | வைக்கம், கேரள மாநிலம் |
| 57 | செப்டம்பர் 24 | டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் பிறந்த நாள் | திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் |
| 58 | செப்டம்பர் 25 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி பிறந்த நாள் | உடுமலைப் பேட்டை, திருப்பூர் மாவட்டம் |
| 59 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 60 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் | அனைத்து மாவட்டங்கள் |
| 61 | அக்டோபர் 4 | தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த நாள் | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 62 | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 63 | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் | சென்னிமலை, ஈரோடு மாவட்டம் |
| 64 | அக்டோபர் 7 | பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்ட தினம் | கோயம்புத்தூர் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 65 | அக்டோபர் 9 | பெரியவர் எம்.பக்தவத்சலம் பிறந்த நாள் | காந்திமண்டபம் சென்னை மாவட்டம் |
| 66 | அக்டோபர் 10 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை பிறந்த நாள் | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |
| 67 | அக்டோபர் 23 | அமுதகவி உமறுப்புலவர் பிறந்த நாள் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 68 | அக்டோபர் 24 | மருதுபாண்டியர் நினைவு நாள் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 69 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் | பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம் |
| 70 | நவம்பர் 1 | கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழ்நாட்டுடன் இணைந்த நாளை முன்னிட்டுமார்ஷல் நேசமணி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழா | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 71 | நவம்பர் 11 | சுயமரியாதைச் சுடரொளி என்.ஜீவரத்தினம் பிறந்த நாள் | இராயபுரம், சென்னை மாவட்டம் |
| 72 | நவம்பர் 15 | ராவ்பகதூர் குரூஸ் பர்ணாந்தீஸ் பிறந்த நாள் | தூத்துக்குடி, தூத்துக்குடி மாவட்டம் |
| 73 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 74 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 75 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் | திருவல்லிக்கேணி சென்னை மாவட்டம் |
| 76 | டிசம்பர் 12 | அதங்கோட்டாசான் விழா | அதங்கோடு, கன்னியாகுமரி மாவட்டம் |
| 77 | டிசம்பர் 28 | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் படைத் தளபதி வீரன் பொல்லான் பிறந்த நாள் | மொடக்குறிச்சி, ஈரோடு மாவட்டம் |

## வள்ளுவர் கோட்டம்

உலகப் பொதுமறை தந்த அய்யன் திருவள்ளுவர் புகழினை உலகெங்கிலும் கொண்டு செல்ல வள்ளுவர் கோட்டம் முத்தமிழறிஞர் கலைஞரின் சிந்தனையில் தோன்றிய கோட்டமாகும்.

கலையழகும், கம்பீரமும் கொண்டு சென்னையின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக திகழும் சென்னை வள்ளுவர் கோட்டம் 27.04.1973 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

சிறப்பு வாய்ந்த வள்ளுவர் கோட்டம் அன்றைய இந்திய குடியரசுத்தலைவர் திரு.பக்ருதீன் அலி அகமது அவர்களால் 15.04.1976 அன்று திறந்து வைக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற உடன் ஜனவரி 27 அன்று வள்ளுவர் கோட்டத்திற்கு முதன்முதலாக வருகை தந்தார் என்பது வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும்.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வள்ளுவர் கோட்டத்திற்கு வருகை தந்து அய்யன் "திருவள்ளுவர் நாள்" அன்று திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து சிறப்பித்தார்கள்.

**அரசு சார்பில் கொண்டாடப்படும் சிறப்பு விழா**

அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள் அக்டோபர் 2ஆம் தேதி அரசின் சார்பில் ஆண்டுத்தோறும் சிறப்பாக கொண்டாடப்படும். அதனடிப்படையில் கடந்த ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் செய்தித்துறை அமைச்சர் என்கின்ற முறையில் நானும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தோம்.

அன்றைய தினம் மாலையில் காந்தி மண்டபத்தில் உள்ள திறந்தவெளி கலையரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு போட்டிகளில் வெற்றிப்பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் நாட்டுப்புற

கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. முன்னதாக அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் புகைப்பட கண்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் செய்தித்துறை அமைச்சர் என்கின்ற முறையில் நானும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் பெருமக்களும், செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டு புகைப்பட கண்காட்சியைப் பார்வையிட்டோம்.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26 மற்றும் ஆகஸ்ட் 15 ஆகிய நாட்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட தலைவர்களின் நினைவகங்கள் / மணிமண்டபங்கள் மின் விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டு தலைவர்களின் சிலைகளுக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டு வருகிறது.

தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் செய்தித் துறை இணைந்து திருவள்ளுவர் பிறந்த தினமான

தைத்திங்களில், திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கும் விழா ஆண்டுதோறும் திருவள்ளுவர் தினத்தன்று மிகச் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில், தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ள அறிஞர் பெருமக்களுக்கு திருவள்ளுவர் விருது, தந்தை பெரியார் விருது, பேரறிஞர் அண்ணா விருது, அண்ணல் அம்பேத்கர் விருது, பெருந்தலைவர் காமராஜர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த் தென்றல் திரு.வி.க.விருது மற்றும் கி.ஆ.பெ விசுவநாதம் விருது உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்படுகின்றனர்.

கடந்த 16.01.2023 அன்று திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கும் விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது.

**தமிழ்நாடு நாள்**

மெட்ராஸ் மாகாணம் என பல ஆண்டுகளாக அழைக்கப்பட்டு வந்த தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு எனப் பெயர் சூட்டப்பட வேண்டும் என பல்வேறு மொழி அறிஞர்கள், தலைவர்கள் போராடி வந்தனர். குறிப்பாக

திரு.சங்கரலிங்கனார் அவர்கள் அதற்காக உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றபின் 18.07.1967 அன்று சட்டப்பேரவையில் ஒருமனதாக மெட்ராஸ் மாகாணத்திற்கு "தமிழ்நாடு" என பெயர் சூட்டினார். அன்று முதல் தமிழ்நாடு என்று அழைக்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "ஜூலை 18"ஆம் தேதி தமிழ்நாடு நாளாக ஆண்டுத்தோறும் கொண்டாடப்படும் என அறிவித்தார்கள். அதன்படி கடந்த ஆண்டு ஜூலை 18ஆம் நாள் கலைவாணர் அரங்கத்தில் "தமிழ்நாடு நாள்" சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தோம்.

**ஏனைய விழாக்கள்**

மாமன்னர் ராசராச சோழனின் பிறந்த நாளை 2022ஆம் ஆண்டு முதல் தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசு விழாவாகக் கொண்டாட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மூதறிஞர் இராஜாஜி மறைந்த 50ஆவது நினைவு ஆண்டை முன்னிட்டு, அன்னாரின் அரசியல், இலக்கியம், ஆட்சி நிருவாகம், வாழ்க்கை வரலாற்றை பொது மக்களுக்கு விளக்கிடும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் 25.12.2022 முதல் 01.01.2023 வரை நடைபெற்ற சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டனர்.

இச்சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை 26.12.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர், மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர், மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

ஆகியோர்களுடன் பார்வையிட்டார்கள். மேலும், இச்சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை இத்துறை அமைச்சராகிய நானும் 26.12.2022 அன்று பார்வையிட்டேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 28.02.2023 அன்று சென்னை அண்ணா நூற்றாண்டு நினைவு நூலக அரங்கில் "ஏற்றமிகு ஏழு திட்டங்கள்" கீழ் புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்து, பல்வேறு மருத்துவமனை கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, பணி நியமன ஆணைகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விழா செய்தி மக்கள் தொடர்புத் துறையால் சிறப்பாக நடத்தப்பட்டது.

பிரபல பின்னணிப் பாடகர் டி.எம். சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, அன்னாரைப் பெருமைப்படுத்தும் வகையில், சென்னையில் அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள மந்தைவெளி மேற்கு வட்டச் சாலைக்கு, "டி.எம். சௌந்தரராஜன் சாலை" என புதிய பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர்பலகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.03.2023

அன்று காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, டி.எம். சௌந்தரராஜன் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில், சென்னை கலைவாணர் அரங்கத்தில் ரூபாய் 12 இலட்சம் செலவில் நடைபெற்ற டி.எம். சௌந்தரராஜன் அவர்கள் பாடிய புகழ்பெற்ற பாடல்களின் இன்னிசை கச்சேரியை தொடங்கி வைத்தேன்.

# செய்தி வெளியீட்டுப் பிரிவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், காவல் துறைத்தலைவர், அரசுச் செயலாளர்கள் ஆகியோரது அறிவிப்புகள், அரசு செய்திக் குறிப்புகள், செய்தி வெளியீடுகளை நாளிதழ்கள் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் வாயிலாக பொதுமக்கள் உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வகையில், செய்தி வெளியீட்டுப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

தமிழ் ஆங்கில நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி முகமைகள், காலமுறை இதழ்கள், பிற மாநில நாளிதழ்கள், இணையதளச் செய்தி நிறுவனங்கள், சமூக ஊடகத் தளங்கள் என 400க்கும் மேற்பட்ட ஊடகங்களுக்கு உடனுக்குடன் செய்தி, புகைப்படங்கள் மற்றும் வீடியோ பதிவுகள் இப்பிரிவின் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இப்பணிகளைத் தவிர செய்தியாளர் கூட்டங்கள் நடத்திடத் தேவையான அனைத்துப் பணிகளும் இப்பிரிவின் மூலம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், அரசு சார்ந்த விழாக்கள், முக்கியப்

பிரமுகர்கள் வருகை தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்கு செய்தியாளர்களுக்கும், தொலைக்காட்சிப் பிரிவினருக்கும் தேவையான உதவிகள் அனைத்தையும் வழங்கிடும் வகையில், ஒருங்கிணைப்புப் பணிகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

தலைமையிடத்திலிருந்து வெளியிடப்படும் முக்கிய அறிவிப்புகள், செய்தி வெளியீடுகள், முக்கிய நிகழ்வுகள் தொடர்பான செய்திகள், காணொலிப் பதிவுகள், புகைப்படங்கள் அனைத்தும் அதிநவீன முறையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வலைதளத்தில் (www.dipr.tn.gov.in) உடனுக்குடன் பதிவேற்றப்பட்டு ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அதேபோன்று, அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் மின்னஞ்சல் மூலம் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட்டு, மாவட்ட அளவிலும் செய்திகள், புகைப்படங்கள் வெளிவர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

# சமூக ஊடகப் பிரிவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 2021–22ஆம் ஆண்டு செய்தித்துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி 20.01.2022 அன்று 'சமூக ஊடகப் பிரிவு' உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இப்பிரிவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடுகள், சாதனைகள், நிகழ்ச்சிகள், தொடர்பான செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றை கீச்சகம் (Twitter), படவரி (Instagram), முகநூல் (Facebook) மற்றும் வலையொளி (Youtube) ஆகிய சமூக ஊடகங்களின் வாயிலாக உடனுக்குடன் பொதுமக்களுக்குக் கொண்டு சேர்த்து வருகிறது.

இந்த ஆண்டில் நடைபெற்று வரும் நிதித்துறை மற்றும் வேளாண் துறையின் நிதிநிலை அறிக்கைகளை கோடிக்கணக்கான மக்களின் கைப்பேசிக்கு குறுஞ்செய்தியாக கொண்டு சேர்த்தது, சமூக ஊடகப் பிரிவின் ஒரு மைல்கல் என்று கூறுவதில் பெருமை அடைகிறோம்.

## தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் அன்றாட நிகழ்ச்சிகள், சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் அனைத்து நிகழ்ச்சிகளையும் ஒளிப்பதிவு செய்து அரசினால் அறிவிக்கப்படும் நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் பணிகளை தமிழ்நாடு திரைப்படப்பிரிவு மூலம் செவ்வனே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பிரிவின் வாயிலாக ஒளிப்பதிவு செய்து பதிவு செய்யப்படும் அனைத்து நிகழ்ச்சி தொகுப்புகளையும் பொது மக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் ஊடக மையத்தின் வழியே காணொலி செய்தி நறுக்குகளாக அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகளுக்கு பதிவேற்றம் செய்யப்பட்டு ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

அரசின் முக்கிய விழாக்கள் மற்றும் நிகழ்வுகளை பின்னணிக் குரல் மற்றும் இசையுடன் கூடிய செய்தித் தொகுப்புகளாகத் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மாவட்டச் செய்தி

மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள மின்னணு விளம்பரத்திரை மற்றும் சமூக வலைதளங்களிலும் உடனுக்குடன் பதிவேற்றம் செய்து பொது மக்கள் அறிந்துக் கொள்ளும் வகையிலும் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு அரசின் மக்கள் நலத்திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், சாதனைகள் மற்றும் அவ்வப்போது சமூகத்தில் நிகழும் சமூக மாற்றங்களுக்கேற்பவும், சமூக நலன் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் காணொலி செய்தி மலர், குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்களைத் தற்போது வளர்ந்துள்ள நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கேற்ப திரையரங்க பதிப்புகளாகத் தயாரித்து அவைகளை அனைத்து டிஜிட்டல் சினிமா திரையரங்குகள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் உள்ள மின்னணு விளம்பரத்திரை மற்றும் அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள நவீன மின்னணு வாகனத்தின் விளம்பரத்திரை ஆகியவற்றில் ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

**சமூக வலைதளம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு 16.07.2021இல் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் You tube சேனல் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு அரசால் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை சமூக ஊடகங்களில் சிறப்பாகப் பதிவேற்றம் செய்து வருகிறது.

மேலும், அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒளிப்பதிவு செய்து பின்னணிக் குரல் மற்றும் இசையமைத்து செய்தி தொகுப்புகளாக தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் சமூக வலைதளமான வலையொளி (Tamil Nadu Films Division – YouTube) மூலமாக உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்பட்டு, தமிழ்நாடு மட்டுமல்லாமல் உலக மக்கள் அனைவரிடமும் விரைவாகச் சென்றடையும் விதமாக ஒளிபரப்பப்படுகிறது. இதுநாள் வரை 2,500 காணொலிகள் பதிவேற்றம் செய்யப்பட்டு 9,100 சந்தாதாரர்களை கொண்டு இலட்சக்கணக்கான பார்வையாளர்களால் பார்வையிடப்பட்டுள்ளது.

**திரையில் பாரதி**

திரைப்படங்களில் இடம் பெற்ற பாரதியாரின் பாடல்கள் மட்டுமே இடம்பெறும் இசைக்கச்சேரி "திரையில் பாரதி" என்ற நிகழ்ச்சி 23.07.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பள்ளி மாணவ / மாணவியர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

**"பாரதி யார்"?**

2021–22ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "பாரதியார் படைப்புகளைக் குறும்படம் மற்றும் நாடக வடிவில் தயாரிக்க நிதியுதவி வழங்கி அவற்றை நவீன ஊடகங்களின் வழியாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அறிவித்தார். அதனடிப்படையில் "பாரதி யார்"? எனும்

நிகழ்ச்சி 07.12.2022 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில், எனது தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சி பள்ளி மாணவ மாணவிகளிடேய பெரும் வரவேற்பினை பெற்றுள்ளது. மேலும், இந்நிகழ்ச்சி கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருநெல்வேலி போன்ற மற்ற மாவட்டங்களில் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# புகைப்படப்பிரிவு

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் இயங்கி வரும் புகைப்படப் பிரிவின் மூலம் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சிகளில் புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. மாவட்டங்களில் செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள புகைப்படக்காரர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்துத்துறை அலுவலகங்களுடன் ஒருங்கிணைந்து பணிபுரிந்து வருகின்றனர்.

அரசு தலைமைச் செயலகப் புகைப்படக் காரர்களால் எடுக்கப்படும் புகைப்படங்கள், செய்தி வெளியீட்டுப் பிரிவின் வாயிலாக நாளிதழ்கள் மற்றும் ஊடகங்களில் வெளியிடுவதற்காக உடனுக்குடன் அனுப்பப்படுவதோடு, பொது மக்களின் பார்வைக்காகத் தலைமைச் செயலகத்திலும், புதுதில்லி தமிழ்நாடு இல்லத்திலும் காட்சிப்படுத்தப்படுகின்றன.

மாவட்டங்களில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தால் எடுக்கப்படும் புகைப்படங்கள், அந்தந்த மாவட்டத்தில் இயங்கிவரும் நாளிதழ்கள் மற்றும் ஊடகங்களுக்கு அனுப்பப்படுவதுடன், பொதுமக்களின் பார்வைக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் உள்ள விளம்பரப் பலகைகளிலும், முக்கிய அரசு நிகழ்ச்சிகளில் நடத்தப்படும் சிறு புகைப்படக் கண்காட்சிகளிலும் காட்சிப்படுத்தப் படுகின்றன. நமது துறையால் வெளியிடப்படும் 'தமிழரசு' தமிழ், ஆங்கில மாத இதழ்களில், அனைத்துக் கட்டுரைகளும் வாசகர்கள் எளிதாக அறிந்துகொள்ளும் வகையில் புகைப்படங்களுடன் கூடிய செய்தியும் வெளியிடப்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கும் புதிய திட்டங்கள் தொடர்பான புகைப்படங்கள், சாதனை மலர்கள், சிறப்பு மலர்கள், காலப்பேழைகளில் அச்சடிக்கப்பட்டுப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் முறையில் தமிழரசு வாயிலாக வெளியிடப்பட்டு வருகின்றன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரை 23 மலர்கள் வெளியிடப்பட்டுள்ளது.

அனைத்து அரசு நிகழ்ச்சிகளின் புகைப் படங்கள் எதிர்காலப் பயன்பாடு கருதி ஆண்டு வாரியாக வன்வட்டுகளில் (Hard Disc) சேமிக்கப்பட்டு முறையாக ஆவணப்படுத்தப்படுகின்றன.

# மேற்கோள் பிரிவு

நாளிதழ்கள், காலமுறை இதழ்கள், வெளிமாநில நாளிதழ்கள் போன்றவற்றில் வெளிவரும் முக்கியச் செய்திகளை, துறைவாரியாக, பிரித்து, அந்தந்தத் துறையினரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் சீரியப் பணிகளை மேற்கோள் பிரிவு சிறப்புடன் மேற்கொண்டு வருகிறது.

நாள்தோறும் காலை, மாலை நாளிதழ்கள். காலமுறை இதழ்கள், வெளிமாநில நாளிதழ்களில் வெளியாகும் செய்திகள், செய்தி நறுக்குகளாகத் தொகுக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர் அவர்களின் பார்வைக்கு கோப்பு வடிவில் அனுப்பப்பட்டு வருகிறது. உரிய துறைகளின் மூலம் தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், காகிதமில்லா நடைமுறையினைச் செயல்படுத்தும் விதமாக, செய்தி நறுக்குகள் மின்நாளிதழாக சோதனை முறையில் அனுப்பப்பட்டு வருகின்றன.

மேலும், இப்பிரிவில் அரசுத்துறைகள் குறித்து வெளிவரும் புகார்கள் / குறைகள் குறித்த செய்திகள் உள்ளறி (Scan) செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைச்

செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கட்செவி (WhatsApp) வாயிலாக உடனுக்குடன் அனுப்பி, உரிய பதிலுரையும் பெறப்பட்டு அவை ஊடகத்தில் வெளியிட வழிவகை செய்யப்படுகிறது. மேலும், முக்கியமான நாளிதழ்கள், முறையாகத் தொகுக்கப்பட்டு பைண்டிங் செய்யப்பட்டு எதிர்காலத் தேவைக்கென இப்பிரிவில் ஆவணங்களாகப் பாதுகாக்கப்படுகின்றன. சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெறும் காலங்களிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அலுவலகம், மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் ஆகியோருக்கு, நாளிதழ்களில் வெளியாகின்ற முக்கியச் செய்தி நறுக்குகள் தேவைப்படும்போது உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், உரைகள், செய்தியாளர்கள் சந்திப்பு, அரசின் திட்டங்கள், சாதனைகள், அரசு நலத்திட்ட உதவிகள் உட்பட்ட அனைத்துச் செய்தி நறுக்குகளும், பல்வேறு தலைவர்களின் கருத்துகள், விமர்சனங்கள், நாளிதழ்களின் கட்டுரைகள், தலையங்கங்கள் போன்றவையும் தனித்தனித் தலைப்புகளில் தொகுக்கப்பட்டு கணினியில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

# களவிளம்பரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் கடைக்கோடி மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில் விளம்பரப் பணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டு, கள விளம்பரப் பிரிவு செயல்பட்டு வருகின்றது.

**மண்டல அலுவலர்கள்**

இந்த அரசு பொறுப்பேற்றப் பிறகு தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களை 6 மண்டலங்களாக பிரித்து, அரசின் திட்டங்களை விரைவாகவும், சிறப்பாகவும் மாவட்டங்களில் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும் பொருட்டு, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஆறு இணை இயக்குநர்கள் நியமிக்கப்பட்டு கூடுதலாக பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

| வ.எண் | மண்டலம் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | சென்னை | சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை |
| 2. | திருச்சி | திருச்சி, விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர், கடலூர், கரூர், கள்ளக்குறிச்சி |

| வ.எண் | மண்டலம் | மாவட்டம் |
|---|---|---|
| 3. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், நாமக்கல், ஈரோடு, தருமபுரி, திருப்பூர், கிருஷ்ணகிரி |
| 4. | திருநெல்வேலி | திருநெல்வேலி, கன்னியாகுமரி, விருதுநகர், தூத்துக்குடி, தென்காசி |
| 5. | மதுரை | மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை |
| 6. | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டிணம், திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை |

**மின்னணு விளம்பரத் திரைக்காட்சி வாகனம்**

நவீன மின்னணுத் திரை பொருத்திய விளம்பரத் திரைக்காட்சி வாகனங்கள் 32 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு பகல் மற்றும் இரவு நேரங்களில் மக்கள் அதிகம் கூடும் இடங்கள், அரசு விழாக்கள் நடைபெறும் இடங்கள் போன்றவற்றில் அரசின் திட்டங்கள், சாதனைகள், கொள்கைகள் மற்றும் அறிவிப்புகள் தொடர்பான விழிப்புணர்வுக் குறும்படங்கள் மற்றும் செய்தி மலர் தொகுப்புகள் திரையிடப்பட்டு மக்கள் கண்டு பயனடைத்திடும் வகையில் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மின்னணு விளம்பரத் திரைகள்**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வாயிலாக தயாரிக்கப்பட்டுள்ள அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்கள் நாள்தோறும் அதிகளவில் பொதுமக்கள் வந்து செல்லும் இடங்களான 32 மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்கள், சென்னையில் உள்ள மூன்று வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் புதுதில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் 'மின்னணு விளம்பரத் திரை' (LED Screen) மூலம் திரையிடப்பட்டு கள விளம்பரப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# விளம்பரம்

அரசு துறைகள், வாரியங்கள், பல்கலைக் கழகங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்களை, நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளியிடும் பணியை செய்தி மக்கள் தொடர்புத் துறை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் ஏனைய பணிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி, வரைகலை மற்றும் நில எடுப்பு விளம்பரங்கள் இத்துறையின் மூலம் நாளிதழ்களில் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தில் வெளியிடப்படுகின்றன.

தமிழ்நாடு அரசின் சாதனைகள், திட்டங்கள், கொள்கைகள் மற்றும் சமூகநலப் பணிகளை மக்கள் முழுமையாக அறிந்து பயன்பெறும் வகையில் இத்துறையின் மூலம் நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் மின்னணு ஊடகங்கள், சமூக ஊடகங்கள் ஆகியவற்றில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

விளம்பரத்தின் தன்மை மற்றும் அவை சென்றடைய வேண்டிய பகுதி, தகவல் கொண்டு போய்ச் சேர்க்கப்பட வேண்டிய மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள்**

அரசு விளம்பரங்கள் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் கூடுதல் செலவு ஏதுமின்றி, நவீன மின்னணுத் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, அனைத்து ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களும் தேசியத் தகவல் மையத்தின் (NIC) www.tenders.tn.gov.in என்ற இணையதளத்தில் சம்மந்தப்பட்ட துறைகளால் வெளியிடப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் அரசு நிருணயித்துள்ள கட்டணங்களில் விளம்பரங்களாக நாளிதழ்களிலும், இலவசமாக இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிருவாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பயனாக, தகுதியான அனைவரும் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள்

அரசின் செயல்பாடுகள் அனைத்தையும் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற, ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் இயற்றப்பட்டு, அவற்றின் அடிப்படையில் பொதுமக்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில், மாவட்ட / மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வாரந்தோறும் வியாழக்கிழமை அன்று வெளியிடப்படுகிறன்றன.

ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.50 இலட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.50 இலட்சத்திற்கு மேல் ரூ.75 இலட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியவை குறித்த ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், ரூ.50 இலட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.75 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகியவை பற்றிய ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் வெளியிடப்படுகின்றன.

இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

**நடைபெற்று வரும் திட்டப்பணிகள்**

இனி வருங்காலங்களில், அரசு விளம்பரங்கள் வெளியிடும் பணிகள் அனைத்தும் இணையம் வழியாக மேற்கொள்ளும் வகையில் மென்பொருள் உருவாக்கவும், பராமரிக்கவும் தேசிய தகவல் மையத்தின் (NIC) வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசின் செய்திகள் மற்றும் திட்டங்கள் குறித்த விவரங்கள் உடனுக்குடன் பொதுமக்களை சென்றடையக் கூடிய வகையில், பொதுமக்கள் கூடும் முக்கிய இடங்களான பேருந்து நிலையங்கள், சந்தைகள் போன்றவற்றில் முதற்கட்டமாக 10 மின் சுவர்கள் உருவாக்கப்பட்டு ஒளிபரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## ஊடக மையம்

தலைமைச் செயலக முதன்மைக் கட்டடத்தின் தரைத்தளத்தில் ஊடகமையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தில் 15 செய்தி தொலைக்காட்சி சேனல்களில் வெளிவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகளும், அரசு சார்பான செய்திகளும் அன்றாடம் பதிவு செய்யப்படுகின்றன.

தலைமைச் செயலகத்தில் இருந்து வெளியிடப்படும் செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள், புகைப்படங்கள் அனைத்தும், ஊடக மையத்திலிருந்து உடனுக்குடன் சென்னையில் உள்ள அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்பப்படுவதோடு, அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டு, மாவட்ட ஊடகங்களிலும் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கண்ட செய்திகள், ஊடகங்களில் வெளியான விவர அறிக்கையினை ஒவ்வொரு நாளும் தலைமைச் செயலகத்தில் உள்ள ஊடக மையத்திற்கு அனுப்பி வைக்கின்றனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிகழ்ச்சிகள் தொடர்பான செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள், புகைப்படங்கள் மாவட்ட நாளிதழ்களில் முறையாக வெளியிடப்பட்டு வருகின்றனவா என்ற விவரங்களும் நாள்தோறும் மின்னஞ்சலில் பெறப்பட்டு தொகுக்கப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன.

# பொருட்காட்சிப் பிரிவு

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், பயன்கள், செயல்பாடுகள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் அரசு பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அரசுப் பொருட்காட்சிகளில் ஒன்றிய, மாநில அரசுகளின் பல்வேறு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களும் பங்கேற்கின்றன. இப்பொருட்காட்சிகள், மக்களுக்குப் பொழுதுபோக்காக அமைவதோடு மட்டுமின்றி, நேரடியாகவும், மறைமுகமாகவும், பலருக்கு வேலை வாய்ப்புகளையும் அளித்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். மேலும், இப்பொருட்காட்சிகளில், நலிந்த கலைஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு நாள்தோறும் கலைநிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில், ஆண்டுதோறும் 10 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில்

ஒவ்வொரு ஆண்டும் மற்றும் ஏனைய மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில் சுழற்சி முறையில், 4 மாவட்டங்களிலும் அரசுப் பொருட்காட்சி நடத்தப்படுகின்றன. 2022−23ஆம் ஆண்டில் நடைபெற்ற அரசு பொருட்காட்சியை 7,42,150 பார்வையாளர்கள் கண்டுகளித்தனர். இதன் வாயிலாக ரூபாய் 3 கோடியே 7 இலட்சத்து 46 ஆயிரம் வருவாய் அரசிற்கு ஈட்டப்பட்டுள்ளது.

நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில் அரசுப் பொருட்காட்சிகளில் நடத்தப்படும் விழிப்புணர்வு நாடகங்களுக்கான மதிப்பூதியமாக ரூ.5,000/− (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது.

**தனியார் பொருட்காட்சிகள்**

மாவட்டங்களில் மூன்று நாட்களுக்கு மேல் நடத்தப்படும் தனியார் பொருட்காட்சிகளுக்கான அனுமதியானது தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடனும், பிற துறைகளின் பாதுகாப்பு, தடையில்லா சான்றிதழ்கள் மற்றும் முதலமைச்சர் நிவாரண நிதிக்கான காசோலையுடன் பெறப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. மூன்று நாட்கள் வரையில் மாவட்ட அளவில் தனியார் பொருட்காட்சிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அளவில் உரிய முதலமைச்சர் நிவாரண நிதிக்கான

காசோலைகள் பெற்று அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. 07.05.2021 முதல் 24.03.2023 வரை நடைபெற்ற தனியார் பொருட்காட்சி வாயிலாக முதலமைச்சர் நிவாரண நிதியாக ரூபாய் 2 கோடியே 71 இலட்சத்து 57 ஆயிரம் செலுத்தப்பட்டுள்ளது.

**விடுதலைப் போரில் தமிழகம் – புகைப்படக் கண்காட்சி**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 01.11.2021 அன்று சென்னை, கோயம்பேடு புறநகர்ப் பேருந்துநிலைய வளாகத்தில், 75வது சுதந்திரத் திருநாள் கொண்டாட்டத்தின் தொடர்ச்சியாக, இந்திய விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்தும், இடுக்கண் ஏற்றும், சொல்லொணாத் தொல்லைகளுக்கு ஆட்பட்ட தீரத் தியாகிகளின் வீரப்பெருமைகளை நினைவு கூர்ந்து போற்றும்வகையில் ‘விடுதலைப் போரில் தமிழகம்’ என்ற மாபெரும் புகைப்படக் கண்காட்சியினைத் திறந்துவைத்தார்கள். இக்கண்காட்சியில், இந்திய விடுதலைப் போராட்டங்களின் பல்வேறு வரலாற்றுத் தொகுப்புகள், சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு குறித்த புகைப்படங்கள், குறிப்புகள், சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்றும், மக்களால் இதுவரை அறியப்படாத தியாகிகளின் புகைப்படங்கள், குறிப்புகள், சுதந்திரப் போராட்ட வீரர்களின் உருவம் பொறித்த பழைய நாணயங்கள், அஞ்சல் தலைகள் ஆகியவை இடம் பெற்றிருந்தன. இதனை பல்லாயிரக்கணக்கான

பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள், போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள் ஆகியோர் ஆர்வத்துடன் பார்வையிட்டு மகிழ்ந்தனர். 127 நாட்கள் நடைபெற்ற இக்கண்காட்சி அனைத்து தரப்பினரிடமும் மிகுந்த வரவேற்பினைப் பெற்றது.

**நடமாடும் பேருந்து புகைப்படக் கண்காட்சி**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150ஆவது பிறந்த நாள் விழாவினையொட்டி, 01.11.2021 அன்று பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பயனடையும் வகையில் அரசு போக்குவரத்து துறையின் பேருந்து ஒன்றில், அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் நடமாடும் புகைப்படக் கண்காட்சியினைத் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இப்புகைப்படக் கண்காட்சி அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டது.

**புதுடெல்லி மலர்ப்பேரணி**

புதுடெல்லியில் ஆண்டுதோறும் தேசிய ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், மலர்ப்பேரணி விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை பங்கேற்று பரிசுகளை தொடர்ந்து பெற்று வருகிறது.

## குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள்

புதுடெல்லியில், ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு தின விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத்துறை பங்கேற்று, உயர்மட்டக் குழுவினரால் பரிந்துரைக்கப்படும் கருப்பொருளுக்கு ஏற்ப, அலங்கார ஊர்திகளை வடிவமைத்தும், தேர்ச்சி பெற்ற கலைஞர்களைக் கொண்டு நடத்தப்படும் கலைநிகழ்ச்சிகள் தமிழ்நாட்டிற்குப் பெருமையைச் சேர்த்து வருகிறது.

இந்த ஆண்டு (2023) நடைபெற்ற குடியரசு தின விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் பெண்கள் முன்னேற்றம் மற்றும் கலாச்சாரம் என்கிற கருப்பொருளின் அடிப்படையில் தமிழகத்தின் 7 பெண் சாதனையாளர்களை முன்னிலைப்படுத்திய அலங்கார ஊர்தி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

சென்னையில் நடைபெறும் குடியரசு தின விழாவில், தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் சாதனைகளை காட்சிப்படுத்தும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தனி அலங்கார ஊர்தி இடம் பெறுகிறது.

அரசின் பல துறைகளின் சார்பில் வடிவமைக்கப்படும் அலங்கார ஊர்திகளின் வடிவமைப்புகள் மற்றும் அணிவகுப்பு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது.

சென்னையில் நடைபெற்ற 2023ஆம் ஆண்டுக்கான குடியரசு தினவிழாவில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அலங்கார ஊர்தி **மூன்றாம் பரிசினை** பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த 2022ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் விடுதலைப்போரில் தமிழ்நாட்டின் பங்களிப்பினைப் பறை சாற்றும் விதமாக 3 அலங்கார ஊர்திகள் பங்குபெற்றன. டெல்லியில் நிராகரிக்கப்பட்டதால் அந்த அலங்கார ஊர்திகளை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட மக்களும் கண்டு பயன்பெறும் வண்ணம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 26.01.2022 அன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

இந்த ஊர்திகளை அந்தந்த மாவட்டங்களை சார்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற–சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் வரவேற்று, சிறப்பித்தார்கள்.

மேலும், இந்த ஊர்திகளை அந்தந்த மாவட்டங்களில் உள்ள பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ–மாணவியர்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர்கள், தன்னார்வலர்கள், அரசுப் பணியாளர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் கண்டு களித்து பயனடைந்தனர்.

மேற்கண்ட 3 அலங்கார ஊர்திகளும் சுமார் 7,000 கி.மீ அளவில் தமிழ்நாட்டின் பெரும்பான்மையான மாவட்டங்களுக்கு சென்று வந்துள்ளது.

**இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி**

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும், இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், செய்தி மக்கள் தொடர்புத்துறை தொடர்ந்து பங்கேற்று, அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளைப் பொதுமக்கள் எளிதில் அறிந்திடும் வகையிலும், விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையிலும் தனி அரங்கு அமைத்து வருகிறது.

இந்த ஆண்டு (2023) சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற 47ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் வகையில், தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்படும் கி. ராஜநாராயணன் அவர்களின் மணிமண்டபத்தின் மாதிரி செய்தி மக்கள் தொடர்புத் துறை அரங்கமாக வடிவமைக்கப்பட்டு சிறந்த புதுமையான கருத்துருக்கான இரண்டாம் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது.

## புதுடெல்லி பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி

புதுடெல்லியில், ஆண்டுதோறும் நவம்பர் 14 முதல் 27 வரை 14 நாட்கள் நடைபெறும் அகில இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில், தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி மக்கள் தொடர்புத்துறை அரங்கத்தினை 17.11.2022 தொடங்கி வைத்தேன். தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் தொடர்பான சாதனைகள், திட்டப்பணிகள், கொள்கை விளக்கங்கள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் குறித்த விளக்கப் புகைப்படங்கள் மற்றும் காட்சிப் பொருட்கள் போன்றவற்றை காண்போரைக் கவரும் வகையில் அமைத்து, அனைத்துத் தரப்பு மக்களும் தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் மற்றும் சிறப்புகளை அறிந்து கொள்ளவும், பயனாளிகள் நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கான வழிமுறைகளை அறியும் வகையிலும் அரங்குகளும் வடிவமைக்கப்படுகின்றன.

இந்தியாவிலுள்ள ஏனைய பிற மாநிலங்கள், தமிழ்நாடு அரசின் சாதனைகள், செயல்பாடுகள் அறிந்து கொள்ள வாய்ப்பாக, அகில இந்திய அளவில் நடைபெறும் இப்பொருட்காட்சி அமைந்துள்ளது. மேலும், நம் மாநில மகளிர் சுய உதவிக் குழுக்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களை விற்பனை செய்திட, நாடு தழுவிய அளவில் வணிக வாய்ப்புகளும் ஏற்படுகிறது.

தமிழ்நாட்டின் பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை பிற மாநில மக்களும் அறிந்து கொள்ளும் வகையிலும் நாட்டுப்புற கலைஞர்களின் சமூக பொருளாதாரத்தினை கருத்தில் கொண்டு இப்பொருட்காட்சியில் அவர்களின் கிராமிய நடனங்களும் நடத்தப்படுகிறது.

**சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி**

தமிழ்நாடு அரசின் சாதனைகளைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு, சென்னை மாவட்டம் உட்பட, அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டிற்கு ஒருமுறை அரசு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி நடத்திட, அனைத்து மாவட்டத்திற்கும் தலா ரூபாய் 10 ஆயிரம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஓராண்டில் அரசின் அரும்பணிகளின் தொகுப்பாக "ஓயா உழைப்பின் ஓராண்டு" என்கிற தலைப்பில், அரசு பல துறைகளை ஒருங்கிணைத்து அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகளும் நடத்திட மாவட்டம் ஒன்றிற்கு தலா ரூபாய் 10 இலட்சம் வீதம் 38 மாவட்டங்களுக்கு ரூபாய் 3 கோடியே 80 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. 2022ஆம் ஆண்டில் அரசாணை

வெளியிடப்பட்டது. இப்புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்ட மாவட்டங்களில் பொதுமக்களிடம் இந்நிகழ்ச்சி நல்ல வரவேற்பை பெற்றது.

**திருவிழாக்கள் மற்றும் அரசு விழாக்களில் சிறப்பு புகைப்படக் கண்காட்சி**

மாவட்டங்கள்தோறும் திருவிழாக்கள் மற்றும் அரசு விழாக்களில் அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் சிறு புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**விடுதலைப் போரில் வீரத்தமிழகம் முப்பரிமான ஒளிஒலி கண்காட்சி**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் நாட்டுக்கு உழைத்த நல்லோர்களின் நினைவைப் போற்றும் வகையில் 15.08.2022 அன்று சுதந்திரத் தினத்தினை முன்னிட்டு சுதந்திரப் போராட்டத் தலைவர்கள்/தியாகிகள் குறித்த ஒலி/ஒளி காட்சியினை சென்னை, கலைவாணர் அரங்கத்தில் துறையின் அமைச்சர் என்கிற முறையில் கலந்து கொண்டேன். இந்த ஒலி/ஒளி காட்சி 15.08.2022 முதல் 01.09.2022 வரை 18 நாட்கள் நடைபெற்றது. பொதுமக்கள், இளைஞர்கள், பள்ளி/கல்லூரி மாணவர்கள் இந்த ஒலி/ஒளி காட்சியினை பார்வையிட்டு பயன்பெற்றனர்.

# மாவட்ட செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், செயலாக்கங்கள், சாதனைகள் மற்றும் புதிய அறிவிப்புகளை பயனாளிகளான பொது மக்களுக்கும், மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் மாவட்ட நாளிதழ்கள், தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்கள் வழியாக விளம்பரப்படுத்தும் கள விளம்பரப் பணியை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களும் செயல்படுத்துகின்றன.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மக்கள் தொடர்பு உதவி அலுவலர் (செய்தி), மக்கள் தொடர்பு உதவி அலுவலர் (விளம்பரம்) மற்றும் தேவையான பணியாளர்கள் கட்டமைப்புடன் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் செயல்படுகின்றன. மேலும், சாதனைகள், புதிய அறிவிப்புகள் ஆகியவற்றை உடனுக்குடன் மக்களுக்குக் கொண்டுசெல்லும் பணியைச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றன.

மேலும், அரசின் திட்டங்கள் அனைத்தையும், அனைத்துத் தரப்பு மக்களிடமும் எடுத்துச் சென்றிடும் வகையில், நாளிதழ்கள், ஊடகங்கள், மின்னணு விளம்பரத்திரை வாகனப் படக்காட்சிகள், புகைப்படக் கண்காட்சிகள் ஆகியவற்றின் வாயிலாக, களவிளம்பரப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் உதவி அலுவலர்கள் மேற்கொள்ளும் மாவட்டங்களில் நடைபெறும் திட்டங்கள், பணிகள் குறித்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் செய்தியாளர்கள் பயண ஏற்பாடு செய்தல், அரசின் திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் பேட்டிகளுடன் திட்டம் குறித்து வெற்றிக்கதைகளை நாளிதழ்களில் வெளிவரச் செய்தல், மின்னணு விளம்பர படக்காட்சி நடத்துதல், அரசின் செய்தி மலர் திரையரங்குகளில் திரையிடப்படுவதை ஆய்வு செய்தல், புகைப்படக் கண்காட்சி நடத்துதல், தமிழரசு சந்தா சேகரித்தல், மடிப்பேடுகள், துண்டு பிரசுரங்கள் வெளியிடுதல், சமூக ஊடகங்களைக் கையாளுதல் போன்ற பணிகளின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்பட்டு மாதந்தோறும் தரமதிப்பீடு செய்து உரிய அறிவுரைகளும் வழங்கப்படுகிறது.

**செய்தி நிலையங்கள்**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் செய்தி நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

செய்தி நிலையங்களில் மொழி, இலக்கியம், வரலாறு, அறிவியல் உள்பட்ட பல்வேறு தலைப்புகளில் நூல்கள், நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. மேலும், இச்செய்திநிலையங்களில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்களை ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் பயன்படுத்திப் பயனடைந்து வருகிறார்கள்.

# மாநிலச் செய்தி நிலையம், சென்னை

மாநிலச் செய்தி நிலையம், சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மாநிலச் செய்தி நிலையத்தில் அனைவரும் படித்து பயன்பெறும் வகையில் நூலகம் செயல்பட்டு வருகிறது.

இதில் தமிழ் மற்றும் ஆங்கில இலக்கியங்கள், அறிவியல், ஆய்வுக் கட்டுரைகள், சட்டம், மருத்துவம், உளவியல், ஆன்மீகம், ஜோதிடம், உடற்பயிற்சி, யோகா, வரலாறு, அரசியல், பண்பாடு, தலைவர்களின் வாழ்க்கை வரலாறு உள்ளிட்ட நூல்கள் மற்றும் நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், கல்வியியல் மற்றும் அனைத்து விதமான போட்டித் தேர்வுகளுக்குத் தேவையான குறிப்புகள் அடங்கிய நூல்கள் என பல்வேறு தலைப்புகளில் தமிழ் மற்றும் ஆங்கில வடிவில் சுமார் 69,295 நூல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல்களைப் பொதுமக்கள், அறிஞர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள், மாணவ, மாணவியர்கள், கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் படித்து பயன்பெறும் வகையில் அமைதியான சூழ்நிலையில் இடவசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்நூலகத்தில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் வார இதழ்களும் படித்துப் பயன்பெறுவதற்காக வைக்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை நடவடிக்கை தொடர்பான குறிப்புகள், பேரவை வெளியீடுகள், அரசுத்துறை வெளியீடுகள் ஆகியவை தொகுக்கப்பட்டு மேற்கோள் பணிக்காகச் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் தங்கள் கல்விக்குத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடத்தப்படும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, வினாடி வினா போன்ற பல்வேறு இலக்கியப் போட்டிகளில் பங்கேற்றிடத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் இந்நூலகத்திற்குப் பெருமளவில் வருகை புரிகின்றனர். மேலும், போட்டித்தேர்வுகளில் பங்குபெறும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக பல்வேறு வகை போட்டித் தேர்வு நூல்கள் பிரத்யேகமாக இந்நூலகத்தில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இம்மாநிலச் செய்தி நிலைய நூலகத்தில் பல்வேறு பதிப்பகங்களின் வாயிலாக வெளியிடப்படும் புத்தகங்களின் இரண்டு பிரதிகள் பதிப்புரிமைப் பதிவு பணிக்காகப் பெறப்பட்டு அந்நூல்களில் இடம்பெற்றுள்ள பதிப்புரிமைத் தொடர்பான தகவல்கள்

மட்டும் முறையாகப் பதிவு செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

இவ்வலுவலக நூல்களில் சுமார் 69,295 நூல்கள் இடம்பெற்றுள்ளதால், இங்கு வருகை தரும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர் மற்றும் பொதுமக்கள் தேவையான நூல்களை தெரிவு செய்து, படிக்க விரும்பும் குறிப்பிட்ட நூல்களை விரைவாகவும் எளிதாகவும் தேர்ந்தெடுக்கும் வகையில், இணையதள வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

மேலும், இத்தகைய நூல்களை வருங்கால தலைமுறையினர் படித்து அறிந்து கொள்ளும் வகையில் அவற்றைப் பாதுகாத்திட தமிழக அரசின் மின் நூலகம் அமைத்தல் எனும் திட்டத்தின்படி பொது நூலக இயக்கத்தின் சார்பில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் மூலமாக மாநில செய்தி நிலையத்தில் உள்ள நூல்களில் காப்புரிமை சட்டத்திற்கு உட்படாத வெளியீடுகளான 2,500 நூல்கள் தெரிவுசெய்யப்பட்டு மின்னுருவாக்கமும் (Digitalizing) செய்யப்பட்டுள்ளன.

**தகவல் மையம், தமிழ்நாடு இல்லம், புதுதில்லி**

புதுதில்லியில் உள்ள தகவல் மையம், 1993ஆம் ஆண்டு முதல் வைகை தமிழ்நாடு இல்லத்தில் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் புதுதில்லிக்கு வருகைபுரிந்து, மாண்புமிகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு இந்தியப் பிரதமர், மாண்புமிகு ஒன்றிய அமைச்சர்கள் ஆகியோர்களை சந்திக்கும்போது எடுக்கப்படும் புகைப்படங்கள், காட்சிப்படங்களை அந்தந்த அலுவலகங்களில் இருந்து பெற்று பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு வெளியிடும் பணியை இத்தகவல் மையம் மேற்கொள்கிறது.

புதுதில்லியில் ஆண்டு தோறும் நடைபெறும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி மற்றும் மத நல்லிணக்க மலர்ப்பதாகை ஊர்வலம் ('Phool Walon Ki Seir'), ஆகிய நிகழ்ச்சிகளில் தமிழ்நாடு அரசின் பங்கேற்பினை ஒருங்கிணைக்கும் பணி மற்றும் குடியரசு நாள் கொண்டாட்டத்தின்போது தமிழ்நாடு அரசின் அலங்கார வாகனம் பங்கேற்பினை ஒருங்கிணைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மேலும், ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள் அன்று பாதுகாப்பு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்படும் சுதந்திர நாள் நிகழ்ச்சிகளில் உள்ளுறை ஆணையர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து 'பாரத்பர்வ்', செங்கோட்டை நிகழ்வுகளில் பங்கேற்பது, தமிழ்நாடு இல்லத்தில் 'பொங்கல்விழா' மற்றும் 'தமிழ்நாடு நாள்' போன்ற நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்துதல்,

மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி மற்றும் உள்ளுறை ஆணையர்களின் பொது நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளையும் இம்மையம் மேற்கொண்டு வருகிறது.

இதேபோன்று, ஒன்றிய அமைச்சகங்கள் மூலம் நினைவு நாணயங்கள் மற்றும் தபால் தலைகள் வெளியிடும் பணிகளில் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறைக்குத் தொடர்பு அலுவலகமாகவும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் உச்சநீதிமன்ற வழக்குகள் தொடர்பான அலுவல் பணிகளை மேற்கொள்ளுதல், நடப்பு விவகாரங்கள், சமூக வலைதளங்களின் போக்கு பற்றிய முக்கியத் தகவல்களைச் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், உள்ளுறை ஆணையர்கள் ஆகியோருக்கு அவசியத்தின் அடிப்படையில் வழங்குதல், தமிழ்நாடு இல்லத்தில் மின்னணு விளம்பரத்திரையில் காட்சிப்படங்கள் புகைப்படக் காட்சிகளைப் புதுப்பித்தல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. மேலும், வைகை தமிழ்நாடு இல்லத்தில் ஊடகப் பிரிவினரின் பணி நோக்கத்திற்காக ஒரு ஊடக மையம் இத்தகவல் மையம் வாயிலாகவும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

# தமிழரசு

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சீரிய முயற்சியால் 1970 ஜூலை திங்கள் 1ஆம் நாள், முதல் இதழ் வெளியிடப்பட்டு, 53 ஆண்டுகளாக அரசின் நலத்திட்டங்களையும், சாதனைகளையும் தொகுத்து மாதந்தோறும் இதழ் வடிவில் வெளியிடுவதால் தமிழ்நாடு அரசின் அச்சு ஊடகமாக 'தமிழரசு' இதழ் திகழ்கிறது. தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் அனைத்து மக்கள் நலத்திட்டங்களையும், அரசின் கொள்கைகளையும், மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் பல்வேறு வெளியீடுகளாக வெளியிடப்பட்டு வந்த இதழ்களை ஒருங்கிணைத்து செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 'தமிழரசு' என்ற மாத இதழ் வெளியிடப்பட்டு வருகிறது.

அனைத்துத் தரப்பு மக்களும் படித்துப் பயனடைந்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரைகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகமெங்கும் பங்கேற்று சிறப்பிக்கும் அரசு விழாக்கள், ஆய்வுக் கூட்டங்கள், கள ஆய்வுப் பணிகள், செய்தி குறிப்புகள், பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள், சட்டமன்றத்தில் 110

விதியின்கீழ் அறிவித்த அறிவிப்புகள், அனைத்துத் துறைகளின் சார்பில் அறிவிக்கப்பட்டத் திட்டங்கள், அறிவிப்புகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விரிவானக் கட்டுரைகள், மாநிலம் முழுவதிலும் அரசு நலத்திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் நேர்காணல்கள், வெற்றிக்கதைகள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழறிஞர்கள், தேசத் தலைவர்கள் ஆகியோர்களைப் பற்றிய சிறு குறிப்புகள், இலக்கியம் போன்ற பொதுவான தகவல்களைத் தொகுத்து 'தமிழரசு' மாத இதழில் வெளியிடப்படுகின்றன.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பதவியேற்று தற்போது ஈராண்டு நிறைவடையும் தருவாயில், இதுவரை 6 சிறப்பு மலர்கள் உட்பட 23 சிறப்பு வெளியீடுகளை 'தமிழரசு' அச்சகத்தின் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளது.

**சிறப்பு வெளியீடுகள் வெளியிடப்பட்ட விபரங்கள்**

| | |
|---|---|
| 1 | மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை (24.06.2021) |
| 2 | 'தலை நிமிரும் தமிழகம், நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள்' எனும் சாதனை மலர் (ஆகஸ்டு 2021) |
| 3 | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட துறைவாரியான அறிவிப்புகள் (13.08.2021 முதல் 13.09.2021 வரை) |

| | |
|---|---|
| 4 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள் (24.08.2021 முதல் 13.09.2021 வரை) |
| 5 | நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மார்பளவு சிலைத் திறப்பு சிறப்பு மலர் (டிசம்பர் 2021) |
| 6 | மக்களுக்குத் தேவையெனில், மக்கள் நலனை முன்னிறுத்தி, கடந்த ஆட்சியில் செயல்படுத்தப்படாத அறிவிப்புகளையும் சேர்த்து நிறைவேற்றுவோம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற பதிலுரை (மார்ச் 2022) |
| 7 | நிறைவான வளர்ச்சியில் நிலையான பயணம் ஓராண்டு சாதனை மலர் (தமிழ்) (07.05.2022) |
| 8 | Sustained Journey towards all round growth one year achievements (English) (07.05.2022) |
| 9 | "முதலாண்டு முத்தான தொடக்கம், இரண்டாமாண்டு இணையற்ற ஆண்டாக இருக்கும்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவுப் பெறுவதையொட்டி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110 இன் கீழ் ஆற்றிய உரை (07.05.2022) |
| 10 | கடைக்கோடித் தமிழரின் கனவுகளைத் தாங்கி – காலப்பேழை (மே 2022) |
| 11 | அறிஞர்கள் ஆளுமைகள் பார்வையில் திராவிட மாடல் அரசு (மே 2022) |

| | |
|---|---|
| 12 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (13.05.2021 முதல் 30.12.2021 வரை) தொகுப்பு–1 |
| 13 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (01.01.2022 முதல் 05.05.2022 வரை) தொகுப்பு–2 |
| 14 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள் (12.05.2021 முதல் 10.05.2022 வரை) தொகுப்பு–1 |
| 15 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள் (24.08.2021 முதல் 09.05.2022 வரை) |
| 16 | இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு (மே 2022) தொகுப்பு–1 |
| 17 | இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு (மே 2022) தொகுப்பு–2 |
| 18 | இதயம் திறந்து இதழ்கள் பாராட்டு (மே 2022) தொகுப்பு–3 |
| 19 | தமிழ்நாடு நாள் ஜூலை 18 (ஜூலை 2022) |
| 20 | நூற்றாண்டு கண்ட கல்விப் புரட்சி (15.09.2022) |
| 21 | வ.உ.சி. 150 பிறந்த ஆண்டு மலர் (18.11.2022) |
| 22 | பாரதி நினைவு நூற்றாண்டு மலர் (11.12.2022) |
| 23 | இலக்கிய மலர் 2023 (04.02.2023) |

மேற்காணும் சிறப்பு வெளியீடுகளில் குறிப்பாக,

(1) **"அறிஞர்கள் ஆளுமைகள் பார்வையில் திராவிட மாடல் அரசு"** என்ற சிறப்பு மலர்,

(2) தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களால் தமிழ்நாடு பெயர் மாற்ற சட்டமன்றத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட நாளினை "தமிழ்நாடு நாள்" என்று கொண்டாட ஆணையிடப்பட்டு, அந்நாளினை சிறப்பிக்கும் வகையில் **"தமிழ்நாடு நாள் ஜூலை 18"** என்ற சிறப்பு மலர்,

(3) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிந்தையில் உருவான மகத்தான திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் முக்கியத்துவத்தைத் தொகுத்து **"நூற்றாண்டு கண்ட கல்விப்புரட்சி"** என்ற சிறப்பு மலர்,

(4) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்திய தேச விடுதலைக்காகப் பாடுபட்ட வீரத் தலைவர்களை, குறிப்பாக தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களை பெருமைப்படுத்துகின்ற வகையில், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150ஆவது பிறந்த நாளினை போற்றும் வகையில் **"வ.உ.சி. 150 பிறந்த ஆண்டு மலர்"**,

(5) மகாகவி பாரதியார் அவர்களின் நூறாவது நினைவு நாளினை முன்னிட்டு **"பாரதி நினைவு நூற்றாண்டு மலர்"** என்ற சிறப்பு மலர்.

(6) 1997ஆம் ஆண்டு மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் **"இலக்கிய மலர்"** என்ற சிறப்பு மலர் முதன்முதலாக வெளியிடப்பட்டது. அதனை பின்பற்றும் வகையில், கால்நூற்றாண்டுக்குப் பின் இலக்கியத்தினைக் காத்து வளர்க்கும் பணியினை மேற்கொள்ளும் விதமாக, தமிழ்நாட்டின் பாரம்பரிய இலக்கியம், பண்பாடு, கலாச்சாரம், சமூக வளர்ச்சியினை எடுத்துக்காட்டும் வகையில், நூற்றுக்கணக்கான தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், வரலாற்று அறிஞர்கள், கவிஞர்கள், ஓவியர்கள் ஆகியோர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களிடமிருந்து பெறப்பட்ட படைப்புகள் அனைத்தையும் **"இலக்கிய மலர் 2023"** என்ற சிறப்பு மலராகத் தொகுக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.02.2023 அன்று வெளியிடப்பட்டது. இனி வரும் ஒவ்வொரு ஆண்டும் தைத் திங்களில் 'இலக்கிய மலர்' வெளியிடும் பணி தொடரும்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பிற்கிணங்க, இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ்நாடு அளித்த பங்களிப்பு குறித்த

முழுமையான ஆவணம் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடுவதற்கானப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

**மடிப்பேடுகள்**

விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழ்ச் சான்றோர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய மடிப்பேடுகள் தயாரித்து அச்சடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக விநியோகிக்கப்படுகின்றன. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகள், வள்ளுவர் கோட்டம் பற்றிய குறிப்புகள், இந்தியப் பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சி 2021 (India International Trade Fair 2021) மற்றும் 53ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா (Film Bazaar 2022 Goa) பற்றிய குறிப்புகள் அச்சிடப்பட்டு பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**சுவரொட்டிகள்**

'தமிழரசு' அச்சகத்தின் வாயிலாக, **"தலை நிமிரும் தமிழகம் பேரு சொல்லும் நூறு நாட்கள்"** என்ற தலைப்பில் அரசின் சாதனைகளை விளக்கும் ஐந்து வகையான சுவரொட்டிகள் அச்சடிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும்

வழங்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு முக்கிய இடங்களில் விளம்பரப்படுத்தப்பட்டது.

**இதர வெளியீட்டுப் பணிகள்**

'தமிழரசு' மாத இதழ் பணிகளைத் தவிர்த்து, கூடுதல் பணிகளாக, நினைவகங்கள் பிரிவு, பொருட்காட்சிப் பிரிவு, பத்திரிக்கையாளர் நலவாரியம், திரைப்படத் துறையினர் நலவாரியம் போன்ற இதரப் பிரிவுகளுக்குரிய மடிப்பேடுகள், சுவரொட்டிகள், விண்ணப்பப் படிவங்கள் மற்றும் சிறு தொலைபேசிக் கையேடு அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் சார்பாக Aadhaar Enrolment/Correction/Update Form படிவம்,

இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் மறுபதிப்புக்காகப் பெறப்பட்ட இந்து மத இணைப்பு விளக்கப் புத்தகம், சைவமும் வைணவமும் புத்தகம்,

தமிழ் இணையக் கல்விக் கழகம் சார்பாக கணினித் தமிழ் வளர்ச்சியும், சவால்களும் மாநாட்டு ஆய்வுக்கட்டுரை தொகுப்பு – 1 மற்றும் 2ம்,

திரைப்படத் துறையினர் நல வாரியம் தொடர்பான செயல்முறை நடவடிக்கைகள் குறித்த துண்டுப் பிரசுரங்கள், நல வாரிய உறுப்பினர் அட்டைகள்,

44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி தொடர்பான சிறு தொலைபேசிக் கையேடு,

G20 கல்விக் குழும மாநாடு 2023 தொடர்பான சிறு தொலைபேசிக் கையேடு ஆகியவை அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

மேலும், தமிழ் இணையக் கல்விக் கழகம் சார்பாக, கல்லூரி மாணவர்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டி புத்தகங்கள் ஒரு இலட்சம் பிரதிகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

**இணையதளம் மற்றும் அரசு இ–சேவை மையங்களில் பதிவு செய்தால் இல்லம் தேடிவரும் 'தமிழரசு' மாத இதழ்**

'தமிழரசு' மாத இதழினை பொதுமக்கள், அரசு அலுவலகங்கள், அரசு நூலகங்களின் வாசகர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் அதிக அளவில் வாசிக்கின்றனர். புதிய வாசகர்களுக்காகவும், சந்தாதாரர்கள் சந்தாவினைப் புதுப்பித்துக்கொள்ள ஏதுவாகவும் **www.tamilarasu.org** என்ற இணையதளம் மற்றும் **அரசு இ–சேவை மையங்கள்** வாயிலாகப் பதிவு செய்து 'தமிழரசு' மாத இதழினை அஞ்சல் வழியாகப் பெற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், 'தமிழரசு' மாத இதழ் மற்றும் சிறப்பு மலர்களை பெறுவதற்கு வங்கி காசோலை (Cheque) அல்லது பணவிடை மூலமாகவோ (Demand Draft ) "இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு அலுவலகம், எண் 5, இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை – 600 113" என்ற முகவரிக்கு

பெயர், கதவு எண், தெருப்பெயர், ஊர், மாவட்டம், அஞ்சல் குறியீட்டு எண், கைப்பேசி எண் ஆகியவற்றை தெளிவாகக் குறிப்பிட்டு பெற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**'தமிழரசு' மாத இதழ் கட்டண விவரம்**

| **வ. எண்** | **'தமிழரசு' தமிழ் மற்றும் ஆங்கிலம் மாத இதழ்கள்** | **கட்டணம்** (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | தமிழ் மற்றும் ஆங்கிலம் மாத இதழ் (தனி இதழ்) | 20/- |
| 2 | தமிழ் மற்றும் ஆங்கிலம் (ஆண்டுச்சந்தா) | 240/- |
| 3 | தமிழ் ஆயுள் சந்தா (10 ஆண்டுகள்), (சலுகை கட்டணம்) | 2,000/- |
| 4 | ஆங்கிலம் ஆயுள் சந்தா (10 ஆண்டுகள்) | 2,400/- |

**'தமிழரசு' மாத இதழின் வெற்றிப் பயணம்**

வருகின்ற ஜூலை 2023 அன்று வெற்றிகரமாக 53 ஆண்டுகளைக் கடந்து, தொடர்ந்து வெளியிடப்பட்டு வரும் 'தமிழரசு' (தமிழ் மற்றும் ஆங்கிலம்) மாத இதழானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 07.05.2021 அன்று பொறுப்பேற்றபின், தமிழரசு சந்தா கணிசமாக உயர்ந்துள்ளது.

**சிறப்பு மலர்கள் கட்டண விவரம்**

| வ. எண் | சிறப்பு மலர்களின் பெயர் | கட்டணம் (ரூ.) |
|---|---|---|
| 1 | அறிஞர்கள் ஆளுமைகள் பார்வையில் திராவிட மாடல் அரசு | 220/- |
| 2 | தமிழ்நாடு நாள் ஜூலை 18 | 280/- |
| 3 | நூற்றாண்டு கண்ட கல்விப் புரட்சி | 260/- |
| 4 | வ.உ.சி. 150 பிறந்த ஆண்டு மலர் | 220/- |
| 5 | பாரதி நினைவு நூற்றாண்டு மலர் | 240/- |

**முதன்முறையாக 'தமிழரசு' சிறப்பு மலர்கள் புத்தகக் கண்காட்சியில் விற்பனை**

'தமிழரசு' அச்சகத்தின் 53 ஆண்டுகால வரலாற்றில் முதன்முறையாக இவ்வாண்டு முதல், 'தமிழரசு' அச்சகத்தின் வாயிலாக தொகுத்து வெளியிட்ட சிறப்பு மலர்களை சலுகைக் கட்டணத்தில் அனைவரும் வாங்கிப் படித்து பயன்பெறும் நோக்கத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.01.2023 அன்று சென்னையில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் பங்கேற்ற 'தமிழரசு' அரங்கில், முதல் சிறப்பு மலர் விற்பனையினைத் துவக்கிவைத்தார்.

இனிவரும் காலங்களிலும், இளைய தலைமுறையினர் மேலும் படிக்கும் திறனை அதிகரிக்கும் நோக்கத்தில், சிறப்பு மலர்களை சலுகைக் கட்டணத்தில் விற்பனை செய்யும் பணியினைத் தொடர்ந்து 'தமிழரசு' அச்சகம் மேற்கொண்டு வருகிறது.

# பத்திரிகையாளர் நலன்

## பத்திரிகையாளர் ஓய்வூதியம்

நாட்டில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளையும் செய்திகளாக தொகுத்து மக்கள் பயன்பெறும் வகையில் வழங்கிட அயராது பணியாற்றிவரும் பத்திரிகையாளர்கள் தங்களின் ஓய்வுக்குப் பின்னர் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் அரசு சார்பில் மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றி நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

பத்திரிகையாளர் மாதாந்திர ஓய்வூதியமாக தற்போது ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது. 2022-23ஆம் ஆண்டில் 50 பத்திரிகையாளர்களுக்கு பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 282 பத்திரிகையாளர்களுக்கு பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்**

ஓய்வூதியம் பெற்றுவரும் பத்திரிகையாளர்களின் மறைவுக்குப் பின்னர், அவர்களின் குடும்ப நலனைக் கருத்தில்கொண்டு, மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு மாதாந்திர குடும்ப ஓய்வூதியமாக தற்போது ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது.

2022-23ஆம் ஆண்டில் 12 நபர்களுக்கு பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 59 நபர்களுக்கு பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றன.

**பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி**

பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், புகைப்படக்காரர், செய்தியாளர், பிழை திருத்துபவர் ஆகியோர் பணிக்காலத்தில் இயற்கை எய்திட நேரிட்டால், அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது.

| பணிபுரிந்த ஆண்டுகள் | குடும்ப உதவி நிதித்தொகை (ரூ.) |
|---|---|
| 5 | 1,25,000/- |
| 10 | 2,50,000/- |
| 15 | 3,75,000/- |
| 20 | 5,00,000/- |

2022-23ஆம் ஆண்டில் 19 நபர்களுக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 86 நபர்களுக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர் நலநிதியம்**

பத்திரிகையாளர் நலநிதிக்கென தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் (The Tamil Nadu Power Finance and Infrastructure Development Corporation Ltd.,) ரூபாய் ஒரு கோடி நிரந்தர நிதியாக வைப்பீடு செய்யப்பட்டு, இந்தத் தொகையின் மூலம் கிடைக்கப்பெறும், வட்டித் தொகையிலிருந்து பத்திரிகையாளர்கள் பணிக் காலத்தில் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை மேற்கொள்ளும் நேரத்தில், அவர்களுக்கு மருத்துவ நிதியுதவியாக அதிகபட்சமாக ரூபாய் 2 இலட்சத்து 50 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது.

**அரசு வாடகைக் குடியிருப்பு**

சொந்த வீடு இல்லாத செய்தியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியரின் அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டில், சென்னையிலும், பிற மாவட்டங்களிலும் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளில் குறைந்த வாடகையில் 143 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**வீட்டுமனை வசதி**

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அனுமதியுடன், மாவட்டங்களில் பணியாற்றும் செய்தியாளர்களுக்கு, சலுகை விலையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மூலம் 1,317 வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

**செய்தியாளர்கள் அங்கீகார அட்டை**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் அரசு விழாக்கள், மிக முக்கிய பிரமுகர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளுக்குச் சென்று செய்தி சேகரித்திட ஏதுவாக, நாளிதழில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள். தொலைக்காட்சியில் பணிபுரியும் செய்தியாளர்கள், ஒளிப்பதிவாளர்களுக்கு, அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2022–23ஆம் நிதியாண்டில் சென்னையில் 729 பத்திரிகையாளர்களுக்கும், பிற மாவட்டங்களில் 140 பத்திரிகையாளர்களுக்கும் ஆக மொத்தம் 869 பத்திரிகையாளர்களுக்கும் செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**காலமுறை இதழ்களுக்கான செய்தியாளர் அட்டை**

செய்தியாளர்கள் முக்கிய இடங்களுக்குச் சென்று செய்தி சேகரித்து வெளியிட ஏதுவாக, காலமுறை இதழ் செய்தியாளர்களுக்கும் செய்தியாளர் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் 479 செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**செய்தியாளர்களுக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டை**

செய்தியாளர்களுக்கு சென்னை, விழுப்புரம், அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் பயணம் செய்திட 420 எண்ணிக்கையிலும், பிற மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின் பேரில், 2,958 எண்ணிக்கையிலும் ஆக மொத்தம் 3,378 செய்தியாளர்களுக்கு கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## செய்தியாளர்கள் அறை

தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள செய்தியாளர்கள் அறையில், செய்திகளை உடனுக்குடன் அனுப்புவதற்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளது.

## கலைஞர் எழுதுகோல் விருது

இத்துறையின் அறிவிப்பிற்கிணங்க, இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றிவரும் சிறந்த ஒரு இதழாளருக்கு ஆண்டுதோறும் ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் கொண்ட 'கலைஞர் எழுதுகோல் விருது' வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தேர்வுக்குழுவினரால் தேர்வு செய்யப்படும் விருதாளருக்கு ஒவ்வொரு ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 அன்று இந்த விருதானது வழங்கப்படுகிறது.

கடந்தாண்டு 3.6.2022 அன்று தினத்தந்தி நாளிதழில் பணியாற்றிய திரு.ஐ.சண்முகநாதன் அவர்களுக்கு இவ்விருது வழங்கிச் சிறப்பிக்கப் பட்டுள்ளது.

# பத்திரிகையாளர் நலவாரியம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, 2021-22ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில், 06.09.2021 அன்று பத்திரிகையாளர் நலவாரியம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில், பத்திரிகையாளர் நலன் காக்கும் வகையில் பத்திரிகையாளர் நல வாரியம் அமைக்கப்பட்டும், பல்வேறு நலத்திட்ட உதவிகளுக்கான தொகைகள் நிர்ணயிக்கப்பட்டும் அரசாணை வெளியிடப்பட்டது.

கொரோனா பெருந்தொற்று காலத்தில் செய்தியாளர்களின் தன்னலம் கருதாத பணிகளை அங்கீகரிக்கும் வகையில் அவர்களை முன்களப் பணியாளர்களாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**நலவாரிய நிதி**

பத்திரிகையாளர் நல வாரியத்திற்குத் தேவையான நிதி ஆதாரங்களை திரட்டும் நடவடிக்கையாக, பத்திரிகைகளில் அரசு விளம்பரங்களை வெளியிடும் விளம்பர

முகமைகளுக்கு அரசால் வழங்கப்படும் விளம்பரக் கட்டணத்தில் ஒரு சதவிகிதத் தொகையை நல வாரியத்திற்கென வழங்கிட அரசு உத்தரவிட்டுள்ளது.

**பத்திரிகையாளர் நலவாரிய குழுக் கூட்ட விவரம்**

பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்து ஆலோசிக்க ஏதுவாக பத்திரிகையாளர்கள் நல வாரியக் குழுக் கூட்டம் நான்கு முறை நடத்தப்பட்டுள்ளது.

**உறுப்பினர்கள் சேர்க்கை விபரம்**

பத்திரிகையாளர் நலவாரியத்தில், பத்திரிகையாளர்கள் உறுப்பினர்களாக இணைவதற்காக தலைமையிடத்தில் செய்தி வெளியீட்டுப் பிரிவு, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலம் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு, பூர்த்தி செய்து பெறப்பட்ட விண்ணப்பங்களை பத்திரிகையாளர் நலவாரியத்தில் சரிபார்த்து, உறுப்பினர் சேர்க்கைக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பத்திரிகையாளர்கள் குடும்பத்திற்கான நலத்திட்ட உதவிகள்**

1. **கல்வி உதவித் தொகை– இரு குழந்தைகளுக்கு மட்டும்**
    - 10ஆம் வகுப்புப் படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,000/–
    - 10ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு ரூ.1,000/–

- 11ஆம் வகுப்புப் படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,000/–
- 12ஆம் வகுப்புப் படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,500/–
- 12ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு ரூ.1,500/–
- வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று முறையான பட்டப்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.1,500/–
- விடுதியில் தங்கி கல்லூரிக்குச் சென்று முறையான பட்டப்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.1,750/–
- வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று முறையான பட்ட மேற்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.2,000/–
- விடுதியில் தங்கி கல்லூரிக்குச் சென்று முறையான பட்ட மேற்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.3,000/–
- வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று முறையான தொழில்நுட்ப பட்டப் படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.2,000/–

  விடுதியில் தங்கி கல்லூரிக்குச் சென்று முறையான தொழில்நுட்ப பட்டப் படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.4,000/–
- வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று முறையான தொழில்நுட்ப பட்டமேற்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.4,000/–

- விடுதியில் தங்கி கல்லூரிக்குச் சென்று முறையான தொழில்நுட்ப பட்ட மேற்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.6,000/–
- வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று ஐ.டி.ஐ. (அ) பாலிடெக்னிக் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.1,000/–
- விடுதியிலிருந்து கல்லூரிக்குச் சென்று ஐ.டி.ஐ. (அ) பாலிடெக்னிக் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் ரூ.1,200/–

2. **திருமண உதவித் தொகை ரூ.3,000/–**
3. **மகப்பேறு உதவித் தொகை ரூ.6,000/–**
4. **கருச்சிதைவு / கருக்கலைப்பு உதவித்தொகை ரூ.3,000/–**
5. **கண் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் (உறுப்பினர்களுக்கு மட்டும்) ரூ.500/–**
6. **இயற்கை மரணத்திற்கு உதவித்தொகை ரூ.50,000/–**
7. **ஈமச்சடங்கு உதவித்தொகை ரூ.5,000/–**

பத்திரிகையாளர் நலவாரியத்திற்கு வரப்பெறும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, பயனாளிகளைத் தேர்வுசெய்து, நலத்திட்ட உதவிகள் வழங்கிட ஏதுவாக, செய்தித் துறை அமைச்சராகிய என்னை தலைவராகக் கொண்டு, 7 அலுவல்சார் உறுப்பினர்களையும், 6 அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்ட பத்திரிகையாளர் நல வாரியக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

# திரைப்படத்துறையினர் நலவாரியம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அகில இந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் மாநாட்டில் 09.10.2009 அன்று உரையாற்றியபோது "தொழிலாளர் சமுதாயத்தின் நலன்களை உறுதிப்படுத்திடும் வகையில், அரசின் சார்பில் பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்கள் உருவாக்கப்பட்டு, அந்த வாரியங்களின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில், தமிழ்த் திரையுலக வளர்ச்சியிலும், அதன் வாழ்விலும் பல்வேறு நிலையில் தங்கள் உழைப்பை நாளும் அளித்திடும் கலையுலகத்தினரின் நலன்களுக்காகத் தனி நலவாரியம் அமைக்கப்பட வேண்டுமெனத் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பிலும், தமிழ்த் திரையுலகின் சார்பிலும் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கையினை ஏற்றுத் தமிழ்நாடு அரசு சின்னத்திரையினருக்கும் சேர்த்து திரைப்படத்துறையினர் நலவாரியம் ஒன்றினை புதியதாக உருவாக்கும்" என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக செய்தித் துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு அவர்களை உறுப்பினர் – செயலாளராகவும், அலுவல்சார் / அலுவல்சாரா உறுப்பினர்களையும் கொண்ட திரைப்படத்துறையினர் நலவாரியம் அமைக்கப் பட்டுள்ளது.

இந்நலவாரியத்தில், தற்போது 39 சங்கங்களைச் சார்ந்த திரைப்பட, சின்னத்திரைத் தொழிலாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இந்நலவாரியத்தில் தற்போது 26,792 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரையின் படைப்பாக்கத்தில் பங்கேற்றுப் பணியாற்றும் பல்வேறு சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்குக் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, கருக்கலைப்பு மற்றும் கருச்சிதைவு உதவித்தொகை, மூக்குக்கண்ணாடி உதவித்தொகை, விபத்து ஈட்டுறுதித் திட்டம், இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் வாயிலாக உதவிகள் வழங்கப்படுகின்றன.

## நலத்திட்ட உதவிகள்

1. **கல்வி உதவித் தொகை**–இரு குழந்தைகளுக்கு

- 10ஆம் வகுப்புப் படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,000/–
- 10ஆம் வகுப்புத் தேர்ச்சிப் பெற்ற மாணாக்கர்களுக்கு ரூ.1,000/–
- 12ஆம் வகுப்புப் படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,500/–
- 12ஆம் வகுப்புத் தேர்ச்சிப் பெற்ற மாணாக்கர்களுக்கு ரூ.1,500/
- முறையான பட்டப்படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.1,500/
- விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.1,750/–
- முறையான பட்ட மேற்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.2,000/–
- விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.3,000/–
- தொழிற்கல்வி பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.2,000/–
- விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.4,000/–
- தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.4,000/–

- விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.6,000/–
- ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி (அ) பலவகை தொழிற்பயிற்சி பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.1,000/–
- விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி (அ) பலவகை தொழிற்பயிற்சி பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.1,200/–

**2. திருமண உதவித் தொகை ரூ.2,000/–**

**3. மகப்பேறு உதவித் தொகை ரூ.6,000/–**

**4. கருக்கலைப்பு / கருச்சிதைவு உதவித்தொகை ரூ.3,000/–**

**5. மூக்கு கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் ரூ.500/–**

**6. விபத்து ஈட்டுறுதித் திட்டம்**

- விபத்தினால் ஏற்படும் மரணத்திற்கு ரூ.1 இலட்சம்
- விபத்தினால் ஏற்படும் ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.10 ஆயிரம் முதல் ரூ.1 இலட்சம் வரை
- இயற்கை மரணத்திற்கு உதவித்தொகை ரூ.15,000/–
- ஈமச்சடங்கு உதவித்தொகை ரூ.2,000/–

நலவாரியத்தால் வழங்கப்படும் திட்டத்தின் மூலம் திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரை ஆகியவற்றைச் சேர்ந்த சங்கங்களின் உறுப்பினர்களில் பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை, அவர்களுக்கு ஆண்டு வாரியாக வழங்கப்பட்ட மொத்த உதவித்தொகை விவரம் பின்வருமாறு :

| வ. எண். | வழங்கப்பட்ட ஆண்டு | மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | 2011 | 38 | 1,98,000/– |
| 2. | 2013 | 728 | 21,39,000/– |
| 3. | 2014 | 303 | 8,00,000/– |
| 4. | 2016 | 277 | 8,00,250/– |
| 5. | 2017 | 259 | 9,41,500/– |
| 6. | 2018 | 449 | 13,61,250/– |
| 7. | 2019 | 205 | 7,20,000/– |
| 8. | 2020 | 141 | 5,28,500/– |
| 9. | 2021 | 226 | 8,64,500/– |
| | **மொத்தம்** | **2,626** | **83,53,000/–** |

01.01.2021 முதல் 31.12.2021 வரை 222 உறுப்பினர்களிடமிருந்து ரூ.12,06,250/– (ரூபாய் பனிரெண்டு இலட்சத்து ஆறாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்)க்கான நலத்திட்ட உதவிகள் கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

01.01.2022 முதல் 31.12.2022 வரை 122 உறுப்பினர்களிடமிருந்து ரூ.7,75,500/– (ரூபாய் ஏழு இலட்சத்து எழுபத்தைந்தாயிரத்து ஐந்நூறு மட்டும்)க்கான நலத்திட்ட உதவிகள் கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாரியத்தின் வாயிலாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் நலவாரியக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு, தகுதியான பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

# திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள்

## திரைப்பட விருதுகள்

தமிழ் கலாச்சாரம், தமிழர் பண்பாடு ஆகியவற்றை உலகம் முழுவதும் எடுத்துச் செல்லும் ஊடகமாக தமிழ்த் திரைப்படங்கள் திகழ்கிறது. தமிழ்நாடு அரசால் 1968ஆம் ஆண்டு முதல் தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தயாரித்திட ஊக்கப்படுத்தும் விதமாகச் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்ப கலைஞர்களுக்குத் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்து விருதுகளை வழங்குவதற்கு தமிழ்நாடு அரசால் தேர்வுக்குழு அமைக்கப்பட்டு, இத்தேர்வுக்குழு தேர்ந்தெடுத்து பரிந்துரைக்கும் சிறந்த திரைப்படங்களுக்கு முதல் பரிசாக ரூபாய் 2 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூபாய் ஒரு இலட்சம், மூன்றாம் பரிசாக ரூபாய் 75 ஆயிரம், சிறப்புப் பரிசாக ரூபாய் 75 ஆயிரம்

ரொக்கமாக வழங்கப்படுவதோடு, நினைவுப்பரிசுகள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், மகளிரைப் பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் திரைப்படத்திற்குச் சிறப்புப் பரிசாக ரூபாய் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த நடிகர் (சிறப்புப்பரிசு), சிறந்த நடிகை (சிறப்புப்பரிசு), சிறந்த வில்லன் நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகை, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த இயக்குநர், சிறந்த கதை ஆசிரியர், சிறந்த உரையாடலாசிரியர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பாடலாசிரியர், சிறந்த பின்னணிப் பாடகர், சிறந்த பின்னணிப் பாடகி, சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த திரைப்படத் தொகுப்பாளர், சிறந்த கலை இயக்குநர், சிறந்த சண்டைப்பயிற்சியாளர், சிறந்த நடன ஆசிரியர், சிறந்த ஒப்பனைக் கலைஞர், சிறந்த தையற்கலைஞர், சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவர் (ஆண்) மற்றும் சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவர் (பெண்) ஆகியோருக்குத் தலா 5 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

கடந்த 2009, 2010, 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆகிய 6 ஆண்டுகளுக்குரிய திரைப்பட விருதுகள் 183 கலைஞர்களுக்கு வழங்குவதற்கு 2017ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டு, அவ்விருதுகள் வழங்கப்படாமல் இருந்தது. இவ்விருதுகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கடந்த 04.09.2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் உரிய விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

இவ்விழாவில் செய்தித்துறை அமைச்சர் என்கின்ற முறையில் நானும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும் சிறந்த திரைப்படங்களின் தயாரிப்பாளர்கள் 23 நபர்களுக்கு காசோலையும், 160 நபர்களுக்கு தலா 5 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழையும் வழங்கினோம்.

2015 முதல் 2022ஆம் ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகள் வழங்குவதற்கான நடுவர்கள் குழு அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது

தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது வழங்கப்படுகிறது.

கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்கு தேர்வு செய்யப்படும் விருதாளருக்கு ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 3 அன்று வழங்கப்படும்.

2022ஆம் ஆண்டுக்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட திரு.ஆரூர்தாஸ் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 03.06.2022 அன்று அவர்களின் இல்லத்திற்கே நேரில் சென்று ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழையும் வழங்கி சிறப்பித்தார்கள்.

## கலைத்துறை வித்தகர் விருதுகள்

கலைத்துறையில் தமது எழுத்தாலும், நடிப்பாலும் தனி முத்திரை பதித்த பேரறிஞர் அண்ணா, சமூக சீர்திருத்தக் கருத்துக்களால் சிரிக்கவும், சிந்திக்க வைத்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், கலை

உலகத்தினரை தனது வசீகர குரலால் கவர்ந்த ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதர், பன்முக ஆற்றலுடன் விளங்கிய நடிகர் ராஜாசாண்டோ, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., கலை உலகில் உயர்ந்த நிலையில் மகுடம் சூடிய நடிகர் திலகம் சிவாஜி கணேசன், காலத்தால் அழியாத பாடல்கள் படைத்த கவியரசு கண்ணதாசன், செல்வி ஜெ ஜெயலலிதா ஆகியோரின் பெயர்களில் 'கலைத்துறை வித்தகர் விருதுகள்' தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்விருதுகளைப் பெறுகின்ற கலைத்துறை வித்தகர்களுக்கு, தலா 5 பவுன் தங்கப்பதக்கமும், நினைவுப்பரிசும் வழங்கப்படுகின்றன.

**அரசு திரைப்பட மானியம்**

சமூகப் பொறுப்பும், சமுதாய விழிப்புணர்ச்சியுமிக்க திரைப்படங்களைத் தரமாகவும், சிறிய முதலீட்டிலும் தயாரித்து வெளியிடுவோரை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை, தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் வாயிலாக, குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு திரைப்படத்திற்கும்

இத்திட்டத்தின் வாயிலாக ரூபாய் 7 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

2015 முதல் 2022ஆம் ஆண்டுகளில் குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## சின்னத்திரை விருதுகள்

மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிகப்பெரும் பங்கு வகித்துவரும் சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் நெடுந்தொடர்கள் அதில் பங்கேற்கும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், தமிழ்நாடு அரசின் சார்பில், சின்னத்திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசாக ரூபாய் 2 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கத்துடன் நினைவுப் பரிசும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமின்றி, சிறந்த கதாசிரியர், சிறந்த திரைக்கதை ஆசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர், சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த வில்லி நடிகை,

சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்) சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) மற்றும் சிறந்த தந்திரக் காட்சியாளர் எனச் சின்னத்திரையில் சிறந்து விளங்குவோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தலா 3 பவுன் தங்கப் பதக்கமும், நினைவுப்பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

மேலும், ஆண்டின் சிறந்த சாதனையாளர் மற்றும் சிறந்த வாழ்நாள் சாதனையாளராகத் தேர்வு செய்யப்படுவோருக்குத் தலா ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கமும், நினைவுப்பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

கடந்த 2009, 2010, 2011, 2012, 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளுக்குரிய சின்னத்திரை விருதுகள் 101 கலைஞர்களுக்கு வழங்குவதற்கு 2017ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டு, அவ்விருதுகள் வழங்கப்படாமல் இருந்தது. இவ்விருதுகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இத்துறை அமைச்சர் என்கிற முறையில் நானும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்

அவர்களும் கடந்த 04.09.2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் உரிய விருதாளர்களுக்கு விருதுகள் வழங்கினோம். இவ்விழாவில் சிறந்த நெடுந்தொடர்களின் தயாரிப்பாளர்கள் 20 நபர்களுக்கு காசோலையும், 81 தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு தலா 3 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

2014 முதல் 2022ஆம் ஆண்டுகளுக்கான சின்னத்திரை விருதுகள் வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சர்வதேச திரைப்பட விழாவிற்கு நிதியுதவி**

சென்னையில் 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் 75 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

தேசிய திரைப்பட வளர்ச்சி கழகத்தின் (NFDC) சார்பில் கோவாவில் நடைபெற்ற இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் 10 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்கள் விருதுகள்**

கடந்த 2008–2009ஆம் கல்வியாண்டு முதல் 2013–2014ஆம் கல்வியாண்டுகளுக்கானத் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள் 30 நபர்களுக்கு வழங்குவதற்கு 2017ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டு, அவ்விருதுகள் வழங்கப்படாமல் இருந்தது. இவ்விருதுகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, 04.09.2022 அன்று கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் நானும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் உரிய விருதாளர்களுக்கு விருதுகள் வழங்கினோம். இவ்விழாவில் 30 மாணவர்களுக்கு தலா 1 பவுன் தங்கப்பதக்கம், ரூபாய் 5 ஆயிரத்திற்கான காசோலை, நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டது.

2014–2015ஆம் கல்வியாண்டு முதல் 2021–2022ஆம் கல்வியாண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள் வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# திரையரங்குகள், வீடியோ மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு

தமிழ்நாட்டில் பொதுமக்களின் முதன்மையான பொழுதுபோக்கு அம்சமாக திரைப்படங்கள் உள்ளன. திரைப்படங்கள் படைப்பபாற்றலை வெளிப்படுத்தும் தளமாகவும் மற்றும் பல கலைஞர்களின் வாழ்வாதாரமாகவும் விளங்குகின்றன. அண்மை காலத்தில் திரைப்படத்துறை ஒரு பெரும் தொழிலாக உருவெடுத்துள்ளது.

ஒன்றிய அரசு, திரையரங்குகளில் திரைப்படம் திரையிடுவதற்கு சான்றளிக்கவும், திரையிடுவதை முறைப்படுத்தவும், 1952ஆம் ஆண்டு திரைப்படச் சட்டம் (மத்திய சட்டம் XXXVII/1952) இயற்றியுள்ளது. தமிழகத்தில் திரையரங்குகளை மேம்படுத்துவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும், தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1955 தமிழ்நாடு அரசு இயற்றியுள்ளது. மேலும், திரையரங்குகளை ஒழுங்குபடுத்தவும், திரையரங்குகளுக்கு வரும் பார்வையாளர்களுக்கு அடிப்படை வசதிகள், பாதுகாப்பு நலன் மற்றும் சுகாதாரமான சூழல் ஆகியவற்றை

உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள், 1957 ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில், மொத்தம் 1,044 திரையரங்குகள் உள்ளன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு :–

| வ. எண் | வகைபாடு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நிரந்தரத் திரையரங்குகள் | 1,007 |
| 2. | பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 28 |
| 3. | நடமாடும் திரையரங்குகள் | 8 |
| 4. | திறந்தவெளி திரையரங்குகள் | 1 |
| | **மொத்தம்** | **1,044** |

தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1955இல் மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரத்தை பொறுத்தவரை, காவல்துறை ஆணையரும், **திரையரங்குகள்** கட்டுவதற்கு தடையின்மை சான்று வழங்குவதற்கும், திரையரங்குகளில் திரைப்படங்களைத் திரையிடுவதற்கு படிவம் 'C' உரிமம் வழங்கும் தகுதியான அதிகாரி ஆவார்கள். மேற்படி சட்டவிதிகளின்படி, வருவாய் நிருவாகத் துறையின் இணை ஆணையர் அவர்கள் மேல்முறையீட்டு அலுவலராகவும், அவரது முடிவை சீராய்வு மேற்கொள்ளும் அதிகார அமைப்பாக அரசும் (உள்துறை) உள்ளனர். மேலும், திரையரங்கு

வணிகத்தை பராமரிக்கும் வகையில், தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1955, தொடர்புடைய விதிகளின்படி, திரைப்பட பார்வையாளர்களின் அனுமதி கட்டணத்தை அரசு நிர்ணயிக்கிறது. குளிர்சாதன வசதி கொண்ட மல்டிபிளக்ஸ் திரையரங்குகளுக்கும், மாநகராட்சிகள் / நகராட்சிகள் / நகரப் பஞ்சாயத்துக்கள் மற்றும் கிராம பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றில் அமைந்துள்ள குளிர்சாதன வசதிக்கொண்ட / குளிர்சாதன வசதயில்லாத இதர திரையரங்குகளுக்கும் அதிகப்பட்ச மற்றும் குறைந்தபட்ச நுழைவுக் கட்டணத்தை அரசு நிர்ணயத்துள்ளது. பண்டிகை போன்ற நிகழ்வுகளில் சிறப்பு காட்சிகளுக்கு, உரிய பரிசீலினைக்கு பின் அரசு அனுமதி அளிக்கிறது. இச்சட்டத்தினை மீறுபவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**கம்பிவடத் தொலைக்காட்சி கட்டமைப்பு**

கம்பிவடத் தொலைக்காட்சி கட்டமைப்பு (முறைப்படுத்துதல்), சட்டம் 1995, இந்தியா முழுவதும் உள்ள கம்பிவடத் தொலைக்காட்சி கட்டமைப்பினை முறைப்படுத்துகிறது, 2011ஆம் ஆண்டு திருத்தப்பட்ட கம்பிவடத் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டம் (எண்.21/2011)இன்படி கம்பிவடத் தொலைக் காட்சியினை மாவட்ட மற்றும் உட்கோட்ட நீதித்துறை

நடுவர்கள் மற்றும் அனைத்து மாநகர காவல்துறை ஆணையாளர்கள் ஆகியோர் இச்சட்டத்தின் 3, 4A, 5, 6, 8 மற்றும் 9 அல்லது 10 ஆகிய பிரிவுகளை மீறுவோர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, தமிழகத்தில் மாநகரங்களில் தொடர்புடைய காவல் ஆணையாளர்களும், மாவட்டங்களை பொறுத்தளவில் மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர்கள் மேற்படி சட்டத்தை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கையை மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**வீடியோ சட்டமும் விதிகளும்**

1984ஆம் ஆண்டைய தமிழ்நாடு வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மற்றும் கேபிள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டம், தமிழ்நாட்டில் வீடியோ கேசட் பதிவுக் கருவிகளை பயன்படுத்தி திரைப்படங்களை தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்புவதை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் வீடியோ கேசட் பதிவுக்கருவிகள் மூலம் திரையில் திரைப்படங்களை ஒளிப்பரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனிநபர்களுக்கு உரிமம் வழங்க வகை

செய்கிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில், காவல்துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அதிகாரிகளாக உள்ளனர்.

### பதிப்புரிமைச் சட்டம்

மத்திய சட்டமான, 1957ஆம் ஆண்டைய பதிப்புரிமைச் சட்டமானது, படைப்பாளரை அவரது கலைப் படைப்புக்கான முதல் உரிமையாளர் என வரையறுக்கிறது. இச்சட்டம், பதிப்புரிமை பெற்ற உரிமையாளர்களுக்கு அவர்களுடைய கலை படைப்புகளை வானொலி மற்றும் தொலைக்காட்சியில் ஒலி – ஒளிபரப்பும் ஒவ்வொரு முறையும் உரிமைத் தொகை (Royalty) செலுத்துவதை கட்டாயமாக்குகிறது. பதிப்புரிமை பெற்ற படைப்புகளை ஆராய்ச்சி மற்றும் கல்வி தொடர்பாக உபயோகிக்கும் மாணவர்களுக்கு இச்சட்டம் விலக்கு அளிக்கிறது. 1957ஆம் ஆண்டைய பதிப்புரிமைச் சட்டமானது, திருட்டு வீடியோ நாடாக்கள் சம்பந்தமான குற்றங்கள், திரைப்படம், இசை மற்றும் இதர வகைகளின் பதிப்புரிமை சட்ட விதிமீறல்களை கட்டுப்படுத்துவதற்கு காவல்துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்குகிறது.

### அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு

திருட்டு வீடியோ தடுப்புப்பிரிவு காவல் துறையில் 1995ஆம் ஆண்டு அரசால் நிறுவப்பட்டது. இது

2017ஆம் ஆண்டு முதல் அறிவுசார் சொத்துரிமை அமலாக்க பிரிவு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, திருட்டு வீடியோக்களை கட்டுப்படுத்தவும், பதிப்புரிமை சட்ட மீறல்களைத் தடுக்கும் நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் (குற்றம்), அவர்களின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ், அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு இயங்கிவருகிறது. காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் (குற்றம்), அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு மாநில அளவில் ஒரு காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் தற்போது சென்னை (2), புனித தோமையார் மலை (1), வேலூர் (1), சேலம் (1), கோயம்புத்தூர் (1), திருச்சி (1), கடலூர் (1), மதுரை (1), திண்டுக்கல் (1), விருதுநகர் (1) மற்றும் திருநெல்வேலி (1) ஆகிய பன்னிரெண்டு இடங்களில் இப்பிரிவின் அலகுகள் இயங்கி வருகின்றன.

மேற்கண்ட பிரிவின் சமீபத்திய வளர்ச்சியின்படி, மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு மற்றும் போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு ஆகியவற்றை ஒன்றிணைத்து **அமலாக்கப் பணியகம்** என்று ஒரே கூட்டுப் பிரிவாக

செயல்பட அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும், அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு மறுசீரமைக்கப்பட்டு தலைமையகம், சென்னை, சென்னை மாநகரம் மற்றும் 4 மண்டலங்கள் வடக்கு (வேலூர்), மேற்கு (கோவை), மத்தியம் (திருச்சி), தெற்கு (மதுரை) என மொத்தம் 06 அலகுகளை கொண்டு காவல் கண்காணிப்பாளரின் மேற்பார்வையில் செயல்பட அரசு ஆணையிட்டுள்ளது.

**கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவில் சட்ட விரோதமாக புதிய தமிழ் திரைப்படங்களை ஒளிபரப்பு செய்தவர்களின் மீது தொடரப்பட்ட வழக்குகள்**

கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவில் (Cable TV Network) புதிய திரைப்படங்கள் சட்ட விரோதமாக திரையிடப்படுவதாக தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் அளித்த தகவலின் அடிப்படையில் தமிழகம் முழுவதும் தீவிர சோதனைகள் நடத்தப்பட்டன. வேலூர், விருதுநகர், கடலூர், திருநெல்வேலி, மாவட்டங்களில் 05 வழக்குகள் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. இக்குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட 03 நபர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும், ரூபாய் 1,21,500/– மதிப்புள்ள ஒளிபரப்பு சாதனங்கள் கைப்பற்றப்பட்டன. அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவினரால் 76 வழக்குகள்

பதிவு செய்யப்பட்டு ரூபாய் 61,65,504/- மதிப்புள்ள சாதனங்கள் கைப்பற்றப்பட்டன.

**2022-23ஆம் ஆண்டிற்கான புதிய முயற்சிகள்**

- பேருந்துகளில் அடிக்கடி தணிக்கை மேற்கொண்டு உரிமம் இல்லாத புதிய படங்களை ஒளிபரப்புவதை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- புதிய தமிழ் திரைப்படங்களை பதிவேற்றம் செய்யும் இணையதளங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தவறு செய்யும் இணையதளங்களை முடக்க தமிழ்நாடு மின் ஆளுமை இயக்குனர் மூலமாக CERTIN-க்கு பரிந்துரை செய்ய அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.
- திரையரங்குகளில் காணொலி கருவி (Video) மூலம் சட்ட விரோதமாக படம் எடுப்பதை தடுக்க, சம்பந்தப்பட்ட குற்றவாளிகளின் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு திரையரங்குகளை மூடி முத்திரையிட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.
- கம்பிவடத் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டம் 1995, வர்த்தக முத்திரை சட்டம் 1999 ஆகிய சட்டங்களை மீறும் உண்மையான குற்றவாளிகளை கண்டறிந்து அவர்கள் மீது தமிழ்நாடு சட்டம்

14/1982இன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- மன அழுத்தத்தைக் குறைக்கவும், உடல் நலம் பேணவும் அதிகாரிகளுக்கும், காவல் ஆளிநர்களுக்கும் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

அறிவுசார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவினால் 2017ஆம் ஆண்டு முதல் பிப்ரவரி 2023ஆம் ஆண்டுவரை பதிவு செய்யப்பட்ட வழக்குகள், கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை, கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ஆகிய விவரங்கள் பின்வருமாறு:–

| வருடம் | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட குற்றவாளி களின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட சொத்தின் மதிப்பு (ரூபாய்) | கேபிள் தொலைகாட்சி நடத்துபவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2017 | 5589 | 5591 | 51,24,96,880 | 13 |
| 2018 | 3102 | 3076 | 8,85,28,841 | 29 |
| 2019 | 762 | 710 | 3,37,19,738, | 18 |
| 2020 | 292 | 297 | 1,16,13,631 | 35 |
| 2021 | 151 | 151 | 63,40,428 | 05 |
| 2022 | 76 | 80 | 61,65,504 | 05 |
| 2023 (28.2.23) | 8 | 8 | 5,83,580 | – |
| **மொத்தம்** | **9,980** | **9,913** | **65,94,48,602** | **105** |

# தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் தொழில்நுட்பக் கல்வி பயிற்றுவிக்கும் நிறுவனமாக விளங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசின் செய்தித் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் இந்நிறுவனம் 15.25 ஏக்கர் நிலப்பரப்பில் செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே திரைப்படத் தொழில்நுட்பங்களுக்கான பட்டப்படிப்புகளைக் கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம் இந்நிறுவனம் ஆகும்.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் ஒரு நீண்ட நெடிய வரலாற்றினைக் கொண்டது. கடந்த 1945ஆம் ஆண்டு முதல் மத்திய பல்தொழில்நுட்பப் பயிற்சி மையத்தில் ஓர் அங்கமாக இருந்து, 1960ஆம் ஆண்டு ஒரு தனிப் பயிற்சி நிறுவனமாக மாற்றப்பட்டது. 09.08.2021 முதல் இத்திரைப்படக் கல்விக்கூடம் "தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்" (Tamil Nadu Government M.G.R. Film and Television Institute) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**பட்டப் படிப்புகள்**

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக்குழு (AICTE) அங்கீகாரத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டு நடத்தப்பட்ட பட்டயப் படிப்புகள், 2016–17ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை பல்கலைக் கழகத்துடன் (தற்போதைய தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகம்) இணைந்து நான்காண்டு இளங்கலை காட்சிக்கலை பட்டப்படிப்புகளாக (Bachelor of Visual Arts) மாற்றப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

ஏப்ரல் 2018வரை வழங்கப்பட்ட Diploma in Film Technology (DFT) என்ற பட்டயத்திற்குப் பதிலாக 2016–17ஆம் கல்வியாண்டில் சேர்ந்து, 2019–20இல் Bachelor of Visual Arts (BVA) என்ற பட்டப்படிப்பினை நிறைவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் பின்வரும் பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | இளங்கலை காட்சிக்கலை (ஒளிப்பதிவு) | – | Bachelor of Visual Arts (Cinematography) |
| 2. | இளங்கலை காட்சிக்கலை (எண்மிய இடைநிலை) | – | Bachelor of Visual Arts (Digital Intermediate) |

| | | | |
|---|---|---|---|
| 3. | இளங்கலை காட்சிக்கலை (ஒலிப்பதிவு) | – | Bachelor of Visual Arts (Audiography) |
| 4. | இளங்கலை காட்சிக்கலை (இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்) | – | Bachelor of Visual Arts (Direction and Screenplay Writing) |
| 5. | இளங்கலை காட்சிக்கலை (படத்தொகுப்பு) | – | Bachelor of Visual Arts (Film Editing) |
| 6. | இளங்கலை காட்சிக்கலை (உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் ) | – | Bachelor of Visual Arts (Animation and Visual Effects) |

**மாணவர்களின் சேர்க்கை**

ஒவ்வொரு கல்வியாண்டிலும், 14 மாணவர்கள் வீதம் ஆறு பாடப்பிரிவுகளுக்கும் 84 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். பட்டப் படிப்புகளுக்குரிய கல்விக் கட்டணமாக ரூ.15,000/–ம், சிறப்புக் கட்டணமாக ரூ.2,000/–ம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் ரூ.1,000/–ம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் முழுவதும் விலக்களிக்கப்பட்டு வருகிறது.

## மாணவர்கள் தயாரிக்கும் படங்களுக்கு நிதியுதவி

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் மாணவர்களுக்குக் குறும்படம் தயாரிக்க அளிக்கப்படும் நிதியுதவியை தமிழக அரசு 2017–18ஆம் ஆண்டு முதல் ரூ.15,000/– லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்கியுள்ளது. கல்வி இறுதியாண்டில் குறும்படங்கள் தயாரிக்கப்படுவதற்கான பயிற்சி, ஆறு துறைகளிலும் பயிலும் மாணவர்களைக் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு குறும்படம் என மொத்தம் 14 குறும்படங்கள் தயாரிக்கத் தேவையான அனைத்துப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

## குறும்பட விருது

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்படும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படப்பதனிடுபவர் ஆகியோர் வல்லுநர் குழுவால் தேர்வு செய்யப்பட்டு, "தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்குக்கான குறும்பட விருது" என்ற பெயரில் விருதும், தலா ஒரு பவுன் தங்கப்பதக்கம், நினைவுக் கேடயம் மற்றும் ரூ.5,000/– ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது.

## விருது

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்களின் குறும்படங்கள் "சென்னை சர்வதேசத் திரைப்பட விழா"வில் திரையிடப்பட்டு சிறந்த படைப்பாகத் தேர்வாகும் குறும்படத்திற்கு சிறப்பு விருது ரூ.10,000/– ரொக்கப்பரிசுடன் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

## மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தில் பயிற்சி

தற்போதைய நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப மாணவர்களின் குறும்படங்கள் மற்றும் செயல்முறை பயிற்சிக்காக, திரைத்துறைக்கு இணையாக நவீன தொழில்நுட்பக் கருவிகளை வாடகை அடிப்படையில் எடுத்து மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கும் பொருட்டு, தமிழக அரசால் ஆண்டுதோறும் ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சம் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

# நிறைவுரை

"நமது அரசு மக்களுக்காக உள்ள அரசு, ஏழை எளியவருக்கான அரசு, நாம் எது செய்தாலும் அது அவர்களுக்குப் பயனளிப்பதாக இருக்க வேண்டும்."

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள்

அந்த வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பல்வேறு பிரிவுகளான செய்தி வெளியீட்டுப் பிரிவு, புகைப்படப் பிரிவு, மேற்கோள் பிரிவு, சமூக ஊடகப் பிரிவு, விழாக்கள் பிரிவு, களவிளம்பரப் பிரிவு, விளம்பரப் பிரிவு, நினைவகங்கள் பிரிவு, பொருட்காட்சிப் பிரிவு, பத்திரிகையாளர் நல வாரியம், திரைப்படத் துறையினர் நல வாரியம், தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், மாநிலச் செய்தி நிலையம், அரசின் சாதனைகளைச் சொல்லும் 'தமிழரசு' மாத இதழ், சிறப்பு வெளியீடுகள் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடுகளை உடனுக்குடன் மக்களுக்குத் தெரியப்படுத்தும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் எனப் பல்வேறு பிரிவுகளின் மூலம் தமிழ்நாடு அரசின்

எண்ணற்ற திட்டங்களின் சரித்திரச் சாதனைகளை மக்களிடம் கொண்டுசேர்க்கும் தன்னிகரற்ற பணிகளைச் செய்தி மக்கள் தொடர்புத் துறை சிறப்புடன் நிறைவேற்றி வருகிறது.

அரசுக்கும்–மக்களுக்கும் ஒரு சகோதரத்துவ உணர்வை வளர்த்து, அனைத்து ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தக்கூடிய திட்டங்களை மக்களுக்குத் தெரிவித்துத் தெளிவுப்படுத்துவதில் செய்தி மக்கள் தொடர்புத் துறை என்றும் புதிய உத்வேகத்துடன் செயல்படும்.

"அரசைத்தேடி மக்கள் வந்த காலம் இருந்தது. இப்போது அதை மாற்றி, மக்களைத்தேடி அரசு செல்லும் காலம் இது என்பதை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது." என்றுரைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழியில் என்றும் தொடர்ந்து செய்தி மக்கள் தொடர்புத் துறை தன் பணிகளைச் செயல்படுத்தும்.

**மு.பெ.சாமிநாதன்**
செய்தித் துறை அமைச்சர்

## இணைப்பு–1

**வரவு செலவுத் திட்ட மதிப்பீடு** 2023 –24 **தொகை (ரூபாய் ஆயிரத்தில்)**

| | | 2021–22 கணக்குகள் | 2022–23 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2022–23 திருத்த மதிப்பீடு | 2023–24 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப்பணிகள் | 99,93 | 2,29,66 | 2,29,66 | 2,40,00 |
| 2205 | கலையும் பண்பாடும் | ... | 12,29 | 10,09 | 11,08 |
| **2220** | செய்தி மற்றும் விளம்பரம் | 104,33,21 | 125,28,16 | 145,10,88 | 139,00,96 |
| **2230** | தொழிலாளர் வேலை வாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு | ... | 35,35 | 52,38 | 45,00 |
| **2235** | சமூகப்பாதுகாப்புப் நலனும் | 4,81,95 | 2,11,81 | 2,67,61 | 2,67,61 |
| 2250 | ஏனைய சமூகப் பணிகள் | 12,69 | 16,09 | 14,90 | 16,34 |
| 4202 | கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு | ... | **1** | **1** | **1** |
| | **மொத்தம்** | **11,02,778** | **13,03,337** | **15,08,553** | **14, 48,100** |




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து
மரியாதை செலுத்தினார். (ஓமந்தூரார் தோட்ட வளாகம் - 03.06.2022)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச்சிலையினை திறந்துவைத்து, மாலை அணிவித்து
மரியாதை செலுத்தினார். (எழும்பூர் அருங்காட்சியக வளாகம் - 15.08.2022)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி
மரியாதை செலுத்தினார். (அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம் - 14.04.2022)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
பத்திரிகையில் பணியாற்றி ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கு
ஓய்வூதிய ஆணைகளை வழங்கினார். (31.10.2022)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
வ.உ.சி.யின் 150ஆவது பிறந்த ஆண்டு சிறப்பு இணையப் பக்கத்தினைத்
தொடங்கி வைத்தார். (தலைமைச் செயலகம் - 18.11.2022)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தூத்துக்குடி மாவட்டத்தில், எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களின்
திருவுருவச்சிலையுடன் கூடிய நினைவரங்கத்தை திறந்து வைத்தார்.
(தலைமைச் செயலகம் - 02.12.2022)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
உத்திரபிரதேசம் மாநிலம், வாரணாசியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தினை
புனரமைப்புச் செய்து, அதனைத் திறந்து வைத்தும் அங்கு அமைக்கப்பட்டுள்ள
அன்னாரது மார்பளவுச் சிலையினையும் திறந்து வைத்தார்.
(தலைமைச் செயலகம் 11.12.2022)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
வீரபாண்டிய கட்டபொம்மன், மருது பாண்டியர்களின் திருவுருவச்சிலைகள்
மற்றும் வ.உ.சி. அவர்களின் மார்பளவுச் சிலையினையும் திறந்து வைத்தார்.
(காந்தி மண்டப வளாகம் - 14.02.2023)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சி. அவர்கள் கோவை சிறையில் இழுத்த செக்கு பொலிவூட்டப்பட்டதனைப் பார்வையிட்டார். (காந்தி மண்டப வளாகம் - 14.02.2023)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
வி.கே.பழனிசாமி கவுண்டர், சி.சுப்பிரமணியம், பொள்ளாச்சி நா.மகாலிங்கம் மற்றும்
சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி
எத்தலப்பர் நாயக்கர் ஆகியோருக்கு சிலையுடன் கூடிய
அரங்கம் அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.
(தலைமைச் செயலகம் - 14.02.2023)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
சென்னை, மந்தைவெளி மேற்கு வட்டச் சாலைக்கு "டி.எம்.சௌந்தரராஜன் சாலை"
எனப் புதிய பெயர் சூட்டி பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார்.
(தலைமைச் செயலகம் - 24.03.2023)



மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து, அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். (எழும்பூர் - 27.09.2022)



தமிழ்நாடு அரசின் சார்பில் 2009 முதல் 2014ஆம் ஆண்டு வரையிலான திரைப்படம், சின்னத்திரை, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர்.திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கான விருதுகள் வழங்கும் விழாவில் சிறந்த நடிகருக்கான விருது வழங்கப்பட்டது. (கலைவாணர் அரங்கம் 30.10.2022)



பணியிலிருக்கும்போது இயற்கை எய்திய பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு
பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதி வழங்கப்பட்டது.
(தலைமைச் செயலகம் - 09.11.2022)



தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும்
முக்கியத் தலைவர்களின் சிலைகள் செய்யும் பணி ஆய்வு.
(இராமாபுரம், டி.வி.நகர் - 09.11.2022)



புதுடெல்லியில் நடைபெற்ற
41ஆவது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில்
"தமிழ்நாடு நாள்" விழாவினை குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைக்கப்பட்டது. (17.11.2022)



சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள
முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் நடைபெற்று வரும்
கட்டுமானப் பணிகள் ஆய்வு. (1.12.2022)




“பாரதி யார்” இயல், இசை, நடனம் கலந்த வரலாற்று நாடகம் தொடங்கி வைக்கப்பட்டது.
(அண்ணா நூற்றாண்டு நூலக வளாகம் - 07.12.2022)



சீர்காழி தமிழிசை மூவர் மணிமண்டப மறுசீரமைப்புப் பணிகள் ஆய்வு.
(மயிலாடுதுறை - 23.12.2022)



தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் ஆய்வு. (தரமணி - 09.03.2023)



பணியிலிருக்கும் போது மரணமடைந்த ‘முரசொலி’ நாளிதழ் துணை ஆசிரியர் அவர்களின் குடும்பத்திற்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டது.

(தலைமைச் செயலகம் -30.03.2023)